உ
சிவமயம்

சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பாலபாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ஹூ புரட்டாதி௴ ௨௨ (1942 அக்டோபர் 8 வியாழக்கிழமை) [இலக்கம் ௨௯-5

பெண்கள் கடமை

S. N. S.

(முற்றொடர்)

பழைய வழக்கத்தையும் சைவ சமயத்தையும் இவர்கள் குறைகூறுவதன் முக்கிய காரணங்களில் பெண்களை வீட்டில் அடைத்து வைக்க வேண்டும் என்னும் கொள்கையுடையன என்பது மொன்று. பழைய வழக்கங்களும் சைவசமயமும் நமது நாகரீகத்திற்கும் முன்னேற்றத்துக்கும் அரணுவனவன்றி முரணுவதில்லையென்பது ஆராய்ச்சியுடைய அறிஞர் துணிபு. பிறசமயப் பெண்கள் கல்விச் செல்வத்தால் மாத்திரமல்ல, செவிச் செல்வத்தாலும், காட்சிச் செல்வத்தாலுமே பெரிதும் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். சைவசமயத்தாருள்ளும் கல்விச் செல்வத்தோடு செவிச் செல்வமும் காட்சிச் செல்வமும் பெற்றோர் மிகவும் உயர்நிலையடைந்திருத்தல் கண்கூடு.

பழையகாலத்துப் பெண்கள் இயற்கை வாழ்வு வாழ்ந்தனர். அவர்கள் பல்நாட்டுச் சென்றதாகவும் பூஞ்சோலைகட்குக் கூட்டங் கூட்டமாகச் சென்றதாகவும் பழைய நூல்களில் இருப்பது காண்க. இதனால் அது முற்கால வழக்கமென்பது வெளிப்படை.

பெண்களை வீட்டில் அடைத்து வைத்தல் பழைய வழக்கம் என்று கூறுவோர் எல்லாம் பழைய முறைப்படியே நடக்கிறார்களா? இவர்கள் தேனை வெப்பரிசில் வடித்துத் தேனை நிலத்தில் விட்டதுபோல் அருமையான பழக்க வழக்கங்களை யெல்லாம் கைவிட்டு, வெப்பரிசில் தங்கியவற்றை எடுத்து வைத்திருத்தல்போல இந்த ஒருமுறையை வைத்துக்கொண்டு "நாமே பழைய வழக்கத்தின்படி நடக்கிறோம்" என்று கூக்குரலிட்டுத் தம்மைத் தாமே மேலான நாகரீகமுடையவர்களாகக் கருதி மகிழ்கின்றனர். அந்தோ! இந்த நாகரீகத்தின் பயனாக எத்தனையோ பெண்மணிகள் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், அறிவையுணர்வுடன் வாழ்கின்றனர். தமது பிறவிப்பயனை யடையமாட்டாது துன்புறுகின்றனர். இந்த அநாகரீகமான கொடிய வழக்கமானது அடியோடு நீக்கப்படல் வேண்டும். அவர்களைக் கட்டாயமாகக் கலாசாலைகட்குச் சென்று கல்வி கற்க விடல் வேண்டும். இன்னும் அறிஞர்களால் நிகழ்த்தப்படும் அரிய சொற்பொழிவுகளைக் கேட்டும், தமிழிலும் கலை நாகரீகங்களிற் சிறந்தவருடன் பழகியும் வருவார்களாயின் எவ்வளவோ சீர்திருத்தமாக வாழ்வார்களல்லவோ? குருட்டு வழக்கங்களைப் பழைய வழக்கம் என்று சொல்லி வழங்குவோரிடையில் யாராவது சீர்திருத்தம் செய்யப் புகுவாராயின் அவர்களை அடக்கமில்லாதவர்களென்றும் கிளர்ச்சிக்காரரென்றும் குறைகூறுவர்.

இவர்களைக் குறை கூறுவதனால் எல்லா ஆடவர்களையும் குறை கூறுகிறோமென்று கருதவேண்டுவதில்லை. அன்புநெறி நின்று தொண்டாற்றும் ஆடவர்களிற் பலர் பெண்கள் முன்னேற்றத்தின் பொருட்டுப் பெரிதும் பாடுபடுகின்றனர். அன்னார் பேச்சளவில் நிற்பதில்லை. கடையில் செயலில் கொணர்கின்றனர். அவர்களுக்குப் பெரியவுலகமும் சிறப்பாகப் பெண்ணுலகமும், என்றும் கடமைப்பாடுடையன. அவர்களது நன்றி என்றும் மறக்கற்பாலதன்றென்க.

தொன்றுதொட்டு இன்றுவரையும் வழக்கப்பட்டுவரும் நம்பெண்களது உடையானது நாகரீக உலகில் முதல் இடம்பெற்று வந்திருக்கிறது. இன்னும் அவ்வாறே யிருந்துவருகிறது. இந்த உடையானது நம் நாட்டின் நிலைமைக்கேற்ப மானத்தையும் உடல் நலத்தையும் பேணும் முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது; அழகுடையது; பிறநாட்டாராலும் விரும்பப்படுவது; புகழப்படுவது. தற்காலத்தில் நவநாகரீகப்பித்துப் பிடித்த பெண்கள் இந்த உடையைத் தம்மனம் போனபடியெல்லாம் மாற்றிக் கைபோனபடியெல்லாம் திரித்து அணிந்து மகிழ்கின்றனர். பிறநாட்டாரைப்போல அணிவதே நாகரீகமென்றெண்ணி அன்னாரைப் பின்பற்றுகின்றனர். அவ்வாறு அணிவது சீர்திருத்தமுடையதா? அழகுடையதா? உடம்பிற்குப் பொருத்தமா? என்று ஆராய்வதில்லை. இனிச் சிறுமிகளுக்கும் முழங்காலளவில் உடையணிந்து தலைவிரிகோலமாக வளர்ப்பது நாகரீகமாகக் கருதப்படுகிறது. இன்னும் இக்கால நாகரீக உடைகளைப் பற்றி எழுதப்புகின் மிக விரியும். உடைகளை வாங்கும்போது எமது தாய்நாட்டிற் செய்யப்படும் கதருடைகளையும் மற்றை உடைகளையும் இலங்கையிற் செய்யும் சுதேசித் துணிகளையும் வாங்கி அணிவோமாயின் எம்நாடும் தாய்நாடும் செல்வத்தாலும் செழிப்படையுமென்று கூறவும் வேண்டுமோ? கல்வி முதலியவற்றைப் போலவே உடைநடையிலும் சீர்திருத்தமாக வாழவேண்டியது இன்றியமையாதது. நமக்கென ஒப்புயர்வற்ற நாகரீக உடைகளிருக்க விளக்கிருக்க மின்மினித் தீக்காய முயலுதல் போலப் பிறரைப் பின்பற்றுவது எதற்கு?

வீட்டுக் கருமங்களை நடத்தும் பொறுப்பு பெண்களுடையதே. அவர்கள் வீட்டுக்கருமங்களை முறையாக நடத்தினாற்றான் வீட்டில் ஒழுங்கும் அமைதியும் இன்பமும் நிலவும். அவர்கள் வீட்டைச் சுத்தஞ் சேர்த்து நல்ல முறையில் வைத்திருக்க அறிந்திருத்தல் வேண்டும். உடல் நலத்தைப் பேணும் முறையில் உணவமைக்கும் முறைகளையும் நன்கு அறிந்திருத்தல் நலம். சமையல் எவரும் அறிந்திருப்பது அவசியமாம். அறிந்திருந்தால் தாம் செய்யாவிடினும் பிறரைக் கொண்டு முறையாகச் செய்விக்கலாமன்றோ! சில பெண்கள் சமையல் செய்வது ஒன்றே தமது கடமையாகக் கருதுகின்றனர். அதனால் அவர்கள் வீடுகளில் என்றும் ஒழுங்கீனமே குடிகொண்டிருக்கக் காணலாம். குழந்தைகளைப் பேணுவதில்லை. சமயலின் பொருட்டு மற்றைக் கடமைகள் ஒன்றையும் வழுவவிடக் கூடாது. கடமைகளுடன் அதை ஒரு தொழிலாகக் கருதலாமேயன்றி, அதுவே தமது கடமை யென்று ஒருபோதும் கருதலாகாது.

இக்கால நாகரீகத்தில் சிக்குண்ட சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை வீட்டு வேலை செய்யப் பழக்குவதில்லை. இவர்கள் எங்கள் பிள்ளை வீட்டில் ஒன்றும் செய்வதில்லை என்று பெருமையாகப் பேசிக்கொள்வர். நாமே நாகரீகமாயும் அருமையாகவும் வளர்கிறோம் என்று இறுமாப்புடன் கூறுவர். பிள்ளைகளும் இவற்றைக் கேட்டு அவ்வாறிருப்பதே மேலான நிலையென நினைக்கின்றனர். இவர்கள் வீட்டில் ஒரு செயலுமின்றி யிருக்கிறார்களென்பதை ஒத்துக்கொள்ள முடியாது. முற்றத்துறந்த பெரியோர்களும் மூச்சுவிட வேண்டியிருப்ப உலகத்தோடு தொடர்புடைய இவர்கள் எவ்வாறு ஒரு செயலுமின்றி இருக்கமுடியும்? ஆதலால் இது ஒரு பெருமையைப்பிறகிடமானதா யிருக்கின்றதன்றோ! இன்னும் ஒரு செயலுமின்றி யிருந்தால் உடம்பு பழுதடையும். இங்ஙனம் அறியாமை நிரம்பப்பெற்ற தாய்மாரால் வளர்க்கப்பட்ட பிள்ளைகள் அந்த இமயமலைப் பான சுமையை இறக்கி எறிந்துவிட்டு அன்புநெறி நின்று தொண்டாற்ற முன்வருவாராயின் நாடு நன்னிலையடையும், அவர்களும் நன்னிலையடைவர். பிள்ளைகளைத் தகுந்த கடனாற்றுவதில் வல்லுநர்களாகும் நல்வழியில் வளர்ப்பது நாகரீகமும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

தற்கால வானசாஸ்திரிகள்

Modern Astronomers

மட்டுவில் திருக்கணிதர்
சி. சுப்பிரமணியஐயர்

கொப்பனிக்கஸ்

Copernicus

(1474—1543)

தற்கால வானசாஸ்திர வளர்ச்சிக்குப் பிரதம கர்த்தாவாகக் கருதப்படுபவர் கொப்பனிக்கஸ் ஆவர். இவர் போலண்ட் (Poland) தேசத்திலுள்ள கிருக்கோ (Cracau) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் முதல் கிருக்கோ கலாசாலையிலும் பின்னர் பொலக்னு (Bologna) விலும் கல்வி கற்றார். இவர் கீர்த்தி வாய்ந்த வைத்தியராகவும் தேசிகராகவுமிருந்ததுமன்றி கணிதசாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் மிக்க விருப்புடையவரா யிருந்தார். சூரியனதும் நட்சத்திரங்களினதும் உதயாஸ்தமனங்கள் பூமியினது சுழற்சியால் ஏற்படுகிறதென்றும், சூரியனது காரசமானது துருவநட்சத்திரத்தை நோக்கிச் சரிந்திருக்கிறதென்றும், புதன், வெள்ளி, செவ்வாய், சனியாகிய நட்சத்திரங்கள் சூரியனைச் சுற்றிச் செல்கின்றனவென்றும் தெரியப்படுத்தினர். இவர் தாமாகக் கிரகங்களின் ஸ்புடங்களைக் கணித்தது மாத்திரமன்றி தமக்கு முன்னோர் கணித்து வைத்த ஸ்புடங்களையும் நன்கு ஆராய்ந்தார். இவர் பதின்மூன்று வருடங்களுக்கு முன் எழுதி வைத்திருந்த "De Revolutionibus Orbium Celestium" என்னும் சிறந்த நூலை 1543-ல் வெளியிட்டார். இதில் பூமியும் மற்றைய ஐந்து கிரகங்களும் சூரியனை வட்டமான பாதையில் சுற்றிச் செல்லுகின்றன என்னும் கொள்கையானது மிக விரிவாக விளக்கப்பட்டுளது. இதனால், அனேக வருடங்களாகக் கைக்கொள்ளப்பட்ட பூமத்திய கொள்கையானது நிராகரிக்கப்படலாயிற்று.

டைக்கோ பிறகி

Tycho Brake

(1546—1601)

இவர் டென்மார்க் (Denmark)இலுள்ள ஓர் கிராமத்தில் 1546ல் பிறந்தார். இவர் ஓர் பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவர். லெப்ஸிக் கலாசாலையில் (Lepzig University) கல்வி கற்கும் பொழுதும் இராக்காலத்தில் அநேக நேரமாக நட்சத்திரங்களை அவதானித்து வருவாராயினர். 1572-ல் கஸியோப்பியா (Cassoipea) வுக்குச் சமீபமாகவுள்ள ஓர் புதிய நட்சத்திரத்தை அவதானித்தார். இவர் மிருந்த அவதானசக்தியும் கூர்த்தறிவும் வன்மையுமுடையவர். நட்சத்திரங்களின் நதாம்சம் உன்னதாம்சம் காணற்பொருட்டு கோணதுராமனி (Sextant) யொன்றை இயற்றினர். இரண்டாவது ப்றெடிறிக் சக்கரவர்த்தி (King Frederec II) நோர்வே (Norway)க்கும், சுவீடி (Sweeden) னுக்குமிடையேயுள்ள ஹியூன் (Huen) என்னும் தீவிலிருக்கும் உறேனிபேக் (Uraniburg) என்னுமிடத்தில் ஓர் வேதசாலை யமைத்தார். அவ் டைக்கோபிறகி என்பவரை ஆராய்ச்சி செய்யுமாறு கற்பித்தார். இவர் இறந்தபின்னர் ருடோல்ப் (Rudolph) சக்கரவர்த்தியின் கட்டளைப்படி பிறேகு (Praque) என்னுமிடத்தில் வேறொரு வேதசாலை யமைத்து அதில் தமது ஆராய்ச்சியை நடாத்தி நட்சத்திரங்களின் நிலைகளைக் கிரமமாகப் பதிவு செய்வாராயினர். ஆனால் புதன் சுக்கிரன்களுடைய கலைகள் சந்திரனைப்போல் இவருக்குத் தெரியப்படாமையால் இவர் கொப்பனிக்கஸ் என்பவரது கொள்கையை ஆதரிக்காராயினர். அக்காலத்தில் ஆராதர்சனிகள் இல்லாததினுற்றான் இக் கிரகங்களின் கலைகள் தெரியப்படாதனவாயின. டைக்கோ என்பவரால் மிக நுட்பமாக ஆராய்ந்து குறிக்கப்பட்ட சாசனங்களை இவருக்குப் பின்னர் விளங்கிய கெப்லர் (Kepler) என்பவருக்குத் தமது ஆராய்ச்சியை நடாத்துவதற்கு மிகவும் உதவியாக விருந்தன.

(தொடரும்)

சைவ சமயிகளுக்கு எச்சரிப்பு

யாழ்ப்பாணம் சிவனடியார் திருக்கூட்டக் காரியதரிசி, திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள்.

சைவசமயிகளாகிய நம்மவர்களுள் கல்விமான்கள் பலர் இல்லாமற் போகவில்லை. ஆயிரம் பதினாயிரம் இலட்சக்கணக்காகச் செலவிட்டுத் திருவிழாக்கள் நடாத்தும் புண்ணியவான்கள் இல்லாமற்போகவில்லை. தக்கார் தகவிலர் என்று அன்னதானம் முதலிய செய்யுந் தருமவான்கள் பலர் இல்லாமற் போகவில்லை. வாதுக்குஞ் சண்டைக்கும் வாழ்வுக்குஞ் சாவுக்கும் குடிக்கும் கூத்திற்கும் எவ்வளவேனும் பின்னிடாமல் மார்பைத் தட்டிக்கொண்டு செலவு செய்யுந் தனவான்கள் பலர் இல்லாமற்போகவில்லை. ஆனல், அந்தோ! அந்தோ! சபைகளை வைத்து ஒழுங்காக நடாத்தியும், ஒழுங்காக நடைபெறுஞ் சபைகளை யாதரித்தும், காலதேச வர்த்தமானங்களை யுணர்ந்து நமது சிறுவர்களுக்குச் சமய போதனை செய்தும் சைவசமயபரிபாலனஞ் செய்யும் சைவப்பிரபுக்களைமாத்திரம் காணேம்! காணேம்! இதனாலேயே நமக்கு ஆலயங்களை சாத்திரங்கள் முதலிய எல்லாவற்றையும் இருந்தும் அவற்றினாலடைய வேண்டிய பெரும் பிரயோசனங்களை நாம் இழந்து வருகிறோம். சமயங்களுக்கெல்லாம் நாயகமும் தாயகமுமாகிய நம்முடைய சைவசமயம் குன்றி வருகின்றது. நம்மவர்கள் தங்கள் சமய உண்மைகளையறியாமலே சமயக்குருடர்களாய் இருக்கிறார்கள். சைவசமயானுட்டானங்கள் நிலைகுலைந்து மாறிவிட்டன. ஆலயவழிபாடு அறிவிலிகளுக்கென்றும் அறியாமை மேலிட்ட சனங்கள் கோவிலுக்குப் போகவும் கூசுகிறார்கள். சிவ சின்னங்களைத் தரிக்க வெட்கப்படுகிறார்கள். நமது சிறுவர்கள் யார் யாருடன் பழகுகின்றார்களோ அவரவர்களின் நடையுடை பாவனைகளை அனுசரிக்கிறார்கள். நாத்திகரோடு பழகி நாத்திகராகவும், புத்தரோடு பழகிப் புத்தராகவும், கிறீஸ்தவர்களோடு பழகிக் கிறீஸ்தவர்களாகவும், மகமதியர்களோடு பழகி மகமதியர்களாகவும் மாறுகிறார்கள்.

இவ்விதமாக நமது சைவசமயமானது நிலை குலைந்து மீகாமனில்லா மரக்கலம் போலத் தலைதடுமாறித் தத்தளித்துக்கொண்டு இருக்கிறது. இச்சமயத்தில் கல்விமான்களும், தனவான்களும் சைவசமயத்திற்கு ஆசாரியர்களாகிய ஆதி சைவப் பிராமணர்களும் முனைவந்து சைவ சமயத்தை நிலைநிறுத்துவது கடமையாயிருக்கும் இதை இவர்கள் சிறிதும் கவனியாமல் கடவுளின் மீதும் கலிகாலத்தின் மீதும் பழிபோட்டுவிட்டு, தங்கள் தங்கள் சுயலாபத்தையே பார்த்துக்கொண்டு காலங் கழித்திருக்கின்றார்கள். இவர்களுள் ஆதிசைவப் பிராமணர்கள் பெரும்பாலார் கல்வியறிவின்றித் தங்கள் அருமை பெருமைகளையுணராமல், தங்களை மற்றையவர்களிலும் தாழ்ந்தவர்களாகவும் கல்லைக் கழுவிச் சீவனம் செய்பவர்களாகவும் எண்ணிக்கொண்டும் தங்களைவிட்டாற் கோயில்களிற் பூசை செய்வார் வேறு யாருமில்லையாகையால் தாங்கள் எப்படியிருந்தாலும் தங்களுக்குச் சீவனம் நடந்துவிடுகின்றதென்றும் நிர்ப்பயமாய்க்கொண்டு [illegible] பெருமனும் அதனால் சிவாலயப்பூசை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

பாரதி

மெய்ப்பொருளறிவு நிலை

அ. சீனிவாச ராகவன்

(முற்றொடர்)

பொய்யுறு மாயையைப் பொய்யெனக்கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தில் எறிந்தே
ஐயுறவின்றிக் களித்திருப்பாரவர்
ஆரியராமென்றிங் கூதேடா சங்கம்

உலகத்தை ஒதுக்கிய துறவியின் வார்த்தைகளாகத் தோன்றும்; இது, பாரதிபாடியது.

மோகத்தைக் கொன்றுவிடு-அல்லாலென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு—அல்லாலதில்
சிந்தனை மாய்த்துவிடு.

இதுவும் பாரதியாரின் பாட்டுத்தான். ஆனல் அவருடைய வழி இதுவன்று.

இந்தஉடல் ஊனத்தைச் சடலம். உப்பிட்ட பாண்டம், வரையோட்டுக்குக்கூட உதவாது. புலன்களோ மெய்யறிவை அழிக்கும் விஷப்பாம்புகள். அவை தீண்டுவதால் ஆசைவாய்ச்சென்று சித்தையராகி, அல்லல் படுகிறோம். மனமோ மாயைபடியுந் திரை. பிரபஞ்சமோ மாயை. இது பழைய பல்லவி. பாரதி சொல்கிறார்:-

"உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன. உயிர் சுவையுடையது. மனம் தேன். அறிவுதேன். உணர்வு அமுதம்"

ஏன் தெரியுமா?

மனம் தெய்வம். சித்தம் தெய்வம், உயிர் தெய்வம்.
காடு, மலை, அருவி, ஆறு, கடல் நீ, வான்
ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள்—எல்லாம் தெய்வங்கள்.
ஏனென்றால்,
இவ்வுலகம் ஒன்று
ஆண் பெண் மனிதர் தேவர்......
....
ஞாயிறு, வீட்டுச்சுவர், ஈ, மலையருவி
இன்பம், அன்பம்...பாட்டு.......
வண்ணான், குருவி,
மின்னல், பருத்தி...இஃதெல்லாம் ஒன்று
ஒரேமெய்ப்பொருள் தான் இவற்றில் எல்லாம் வியாபித்து நிற்கிறது.
ஆதித் தனிப்பொருளாகுமோர்—கடல்
ஆகும் குமிழி உயிர்களாம்—அந்தச்
சோதி அறிவென்னு ஞாயிறு—தன்னைச்
சூழ்ந்த கதிர்கள் உயிர்களாம்-இங்கு
மீதிப் பொருள்கள் எவையுமே—அதன்
மேனியில் தோன்றிடு வண்ணங்கள்.

வண்ணத்தின் நிலையை அறிந்தால் மெய்ப்பொருளை அறியலாம். ஆகவே, மெய்ப்பொருளை உணரவேண்டும் என்ற தாகம் பாரதிக்கு ஏற்பட்டதும்,

......இறைவனே, இவ்
வனியிலே, பறவையிலே, மரத்தினிலே
முகிலினிலே வாம்பில் வான
வெளியிலே கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டிலே எல்லாம்
ஒளியிலே கோவிந்தா நின்னைக் கண்டு
நின்னோடு நான் கலப்பதென்றோ?

என்று பிரார்த்தித்தாரே அல்லாமல், புலன்கள் என்ற கள்வர் என்னுட் புகுந்து, கலக்கப்படுத்திட அஞ்சினேன்னடைந்தேன். என்னைக் காப்பாற்று! என்று ஓலமிடவில்லை.

எதற்காக அஞ்சவேண்டும்?
பார்க்குமிட மெல்லாம் நீக்கமற
நிறைகின்ற பரிபூரணனந்தம்; கண்ணை மூடிக்கொள்வானேன்.
தெரித்த திரைக் கடலில் நின்முகம் கண்டேன்
நீல விசும்பினிடை நின்முகம் கண்டேன்
திரித்த நுரையினிடை நின்முகம் கண்டேன்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வேதாகம சைவசித்தாந்தமுந் தனித்தமிழ்ச் சைவ சித்தாந்தமும்

க. நவரத்தினம்

திரு. ப. இராமநாதபிள்ளை அவர்கள் 'இந்துசாதன'த்தில் 'சிவஞானபோத'த்தைப்பற்றி எழுதிய கட்டுரையிற் சிவஞானபோதம் தமிழ் நூலேயன்றி மொழிபெயர்ப்பு நூலன்று எனக் கூறியதை முன்னிட்டு யாழ்ப்பாணத்திற் பலவிடங்களில் கலவரமேற்பட்டிருக்கின்றது. சைவபரிபாலனசபை மண்டபத்தில 'வட இலங்கைச் சிவனடியார் திருக்கூட்டத்'தினரின் ஆதரவில நிகழ்த்தப்பட்ட விரிவுரைகளிலும் தனித்தமிழ்க் கட்சியினரின் கொள்கைகள் மிகவும் கண்டிக்கப்பட்டன. தனித்தமிழ்க் கட்சியினரெனத் தம்மைக் கூறிக்கொள்வாரதும், வேதாகமச் சைவத் தமிழரெனத் தம்மைக் கூறிக்கொள்வாரதும் கொள்கைகளைப் பட்சபாதமின்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தனித்தமிழன்பர்கள் தமிழினிடத்திலும் சைவசித்தாந்தத்திலும் உண்மையன்பு உடையோராவர். சைவசித்தாந்தமே சமயங்களுளெல்லாம் சிறந்த உண்மைச் சமயமென்பது அவர்களது பெருங்கருத்தாகும், அச் சைவசித்தாந்தப் பெருநெறியானது தமிழ்மக்களது சமயக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்ததென்பதே அவர்கள் கருத்து. வடமொழி வேதங்களிலும் அவற்றின் வழிவந்த சமய நூல்களிலும் காணப்படும் சமயக் கொள்கைகளுக்கும், சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைகளுக்கும் எதுவித தொடர்புமில்லையென்பதே அவர்கள் கருத்தாகும்.

பதி, பசு, பாசம் எனக் கூறப்படும் பொருள்கள் அநாதியே யுள்ளனவென்றும் அவைபொருள் தன்மையில் வேற்றுமை யுடையனவென்றும், பதி எல்லாவற்றிற்குந் தலைமையுடையதுவென்றும், பசு பதியின் ஆணையுளடங்கியிருப்பதென்றும், பசுவானது பதியை வழிபட்டு வீடடைதல் வேண்டுமென்றும் சைவசித்தாந்தம் கூறும். இறைவனை வழிபடுதற்கு இன்றியமையாச் சாதனங்கள் திருவுருவங்களும் திருக்கோயில்களுமென்பதும் இதன் முடிந்த முடிபாகும். மேலே காட்டப்பட்டுள்ள கருத்துக்கள் தமிழர்களுக்குச் சொந்தமாயமைந்தனவென்பதே வடமொழி தென்மொழி நூல்களை ஆராய்ந்தார் முடிபாகும்; ஆலயங்களையமைத்து அவற்றின்கண்ணே இறைவனது திருவுருவங்களை வைத்து வழிபடும் முறையானது வேதங்களிலாவது, பிராமணங்களிலாவது, உபநிடதங்களிலாவது மநு முதலிய ஸ்மிருதிகளிலாவது யாண்டுங் கூறப்படவில்லை. உபநிடதங்களின் கருத்தையெல்லாம் திரட்டிக் கூறிய ஞானநூல்களாகிய பிரம்மசூத்திரத்திலாவது பகவத்கீதையிலாவது ஆலயவழிபாடு ஒரு சாதனமாகக் கூறப்படவில்லை. உபநிடதங்களென நாம் கூறுவது சங்கரர், இராமநுஜர், மத்வர் முதலியோரால் பாஷியங்களெழுதப்பட்ட முக்கிய உபநிடதங்களாகிய ஈசம், கேநம், காதம், பிரசிநம், ஐதரேயம், தைத்திரியம், சாந்தோக்கியம், முண்டகம், மாண்டூக்கியம், பிருகதாரண்யகம், சுவேதாச்சுவதரம், மைத்திராயணி என்னும்பன்னிரண்டுமாம்.

சங்கரர், இராமநுஜர் முதலியோரது கொள்கைகள் பிரம்மசூத்திரத்தை ஆதாரமாகக் கொண்டனவாகும். பிரம்மமேயுலகமாகத் தோற்றுகின்றதென்பதே பிரம்மசூத்திரத்தின் கருத்து. இதனைப் பிரம்மப் பரிணாமவாதம் அல்லது ஏகான்மவாதம் என்பர் தத்துவ நூலார். கடவுள் உலகிற்கு முதற்காரணமேயன்றி நிமித்தகாரணமன்று என்பதே இதன் முடிந்த முடிபு. இக்கருத்து சைவசித்தாந்தத்திற்கு மாறுபட்டதென்பதை எவர்தான் மறுத்தல் கூடும்?

கடவுளைத் திருவுருவங்களின் மூலம் வழிபடும்முறை வேதங்களின் வழிவந்த நூல்களில் யாண்டும் கூறப்படவில்லை. ஆயினும் சிவஞானபோதத்திற் காணப்படுகின்றது. ஆலயவழிபாடும், திருவுருவ வழிபாடும் கடவுளை நிமித்தகாரணராகக் கொள்ளும் கருத்தும் வைதிக முதல்நூல்களிலெங்கும் காணப்படாமையால் அவை தமிழ்மக்களது தனிப்பெருங் கொள்கையெனக் கூறுதலும் பொருத்தமாகுமன்றோ! இக்கொள்கைகளுக்கு வைதிக சம்பந்தங்கூற முயல்வது பொருத்தமற்ற செயலாகும். ஆகமங்களே ஆலய வழிபாட்டையும் திருவுருவ வழிபாட்டையும் கடவுளின் நிமித்த காரணத்துவத்தையும் மிகச்சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. இவ்வாகமங்கள் இன்று வடமொழியிற் காணப்படுகின்றனவாயினும் அவற்றின் அடிப்படையான கருத்துக்கள் வைதிகநெறியின் அடிப்படைக்கொள்கைகளுக்கு மாறுபட்டனவேயாகும். தமிழ்மக்களது ஆலயவழிபாடு, திருவுருவ வழிபாடு முதலியனவற்றையும், வைதிக ஸ்மிருதிகளின் ஆசாரங்களையும், சாங்கியம், யோகம் முதலியனவற்றின் கருத்துக்களையும் ஒருங்கு சேர்த்து பிற்காலத்தில் விருந்த சைவர்களாலியற்றப்பட்ட நூல்களே ஆகமங்களாகும். எல்லாச் சமய நூல்களுக்கும் வேதத்தொடர்பிருத்தல் வேண்டுமென்னுங் கருத்து வலுப்பெற்றிருந்தகாலத்தில் இவை எழுந்தனவாதலின் இவை வேதத்தின் வழிவந்த சைவச்சிறப்பு நூல்களாமெனக் கூறிப்போந்தனர் இவற்றின் ஆசிரியர்களும் அவர்கள் வழிவந்தோரும். வேதங்களுங் கண்டறியாத உண்மைகளை ஆகமங்கள் எடுத்து விளக்குகின்றனவென்பதே சைவர்களது கருத்தாகும்.

சிவஞானபோதம் முதலாய சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கும் ஆகமங்களிற் கூறப்பட்ட சமய முடிவுகளையே எடுத்து விளக்கியிருக்கின்றன. எனவே, சித்தாந்த சாத்திரம் பதினன்கினையும் தமக்கு ஆதாரமாகக் கொள்வோர் ஆகமங்களையும் தமது முதல் நூல்களாகக் கொள்ளுதல் இன்றியமையாததாகும். ஆகமங்கள் வடமொழியிலிருப்பினும் சைவசித்தாந்தத்திற்கு அடிப்படையாகவமைந்துள்ள கொள்கைகள் அவற்றில் நன்கு போற்றிப் புகழப்பட்டிருக்கின்றனவென்பதைத் தனித்தமிழன்பர்களும் மறக்கவொண்ணுது. சைவசித்தாந்தப் பேராசிரியராக விளங்கும் சிவஞானசுவாமிகளும் ஆகமக்கருத்துக்களை ஏற்றுப்போற்றிப் பிரமாணங்களாகக் கொண்டிருக்கவும், தனித்தமிழன்பர்கள் அவற்றைத் தள்ளமுயல்வதன் காரணந்தானென்னையோ? பதினன்கு சித்தாந்த சாஸ்திரங்களிற் காணப்படுவனவெல்லாம் தமிழர்களது கொள்கைகளன்று. ஆகவே, சித்தாந்த சாத்திரங்களையேற்றுக்கொள்வோர் ஆகமங்களையும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஆகமங்கள் வடமொழியிற் காணப்படினும் அவை காலத்திற்கேற்ப சைவக்கொள்கையுடையோராலேயே இயற்றப்பட்டன.

நாம் இதுகாறுங் கூறியனவற்றிலிருந்து பெறப்படும் முடிபுகளைவெளில் சைவசித்தாந்தத்தின் அடிப்படையான திரிபதார்த்த உண்மை, திருவுருவழிபாடு, சிவாலயசேவை என்பன தமிழ்மக்களது சொந்தக் கொள்கைகளென்பதும், அவை வேதங்களின் வழிவந்த நூல்களிற் காணப்படாதனவென்பதும், உபநிடதங்களின் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டெழுந்த தத்துவ விசாரணைகளையும், யோகநெறியாதி கொள்கைகளையும், ஸ்மிருதிகளின் ஆசாரங்களையும், தமிழ்மக்களது கொள்கைகளையும் ஒருங்கு சேர்த்த எழுந்த நூல்களே சைவாகமங்களென்பதும்; பதினன்கு சித்தாந்த சாஸ்திரங்கள் ஆகமங்களின் கருத்துக்களையே ஆதாரமாகக்கொண்டுள்ள என்பதுவுமேயாம்.

சித்தாந்த சாஸ்திரங்கள் பதினன்கினையும் ஏற்றுக்கொள்ளும் தனித்தமிழன்பர்கள் அவற்றிற்கு முதனூல்களாகவமைந்துள்ள ஆகமங்களையும் ஏற்றுக்கொள்ளுதலே பொருத்தமுடைத்து. ஆலயவழிபாடு, திருவுருவ வழிபாடு, முப்பொருளுண்மை ஆகியனவற்றை ஏற்றுப்போற்றும் வேதாகமச் சைவத் தமிழன்பர்கள் இக்கொள்கைகள் தனித்தமிழ்க் கொள்கைகளேயாம் என்பதை மிக்க ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்ளுதலும் சிறப்புடைத்தே.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தியதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுவஹ புரட்டாதிமீ ௨௨ வியாழக்கிழமை

ஸ்ராலின் நன்றியற்றவரா?

ருஷிய ஸோவியத் தலைவராகிய ஸ்ராலினைச் சில தினங்கட்கு முந்தி அமெரிக்க பத்திரிகை நிருபரொருவர் சந்தித்துப் பிருத்தானிய அமெரிக்கர் இந்த நேரத்திலே இரண்டாவதாக ஒரு யுத்த முனையைத் தொடங்குவது ஆவசியகந்தானே என்ற விஷயமாகக் கேட்ட போது "இப்பொழுது யுத்தம் நடக்கும் நிலைமையை உத்தேசிக்குமிடத்து இரண்டாவதாக ஒரு யுத்தமுனை தொடங்க வேண்டியது இன்றியமையாதது" என்று ஸ்ராலின் வற்புறுத்திக் கூறினராம். இந்த நேரத்தில் பிருத்தானியரும் அமெரிக்கரும் ருஷியருக்குச் செய்து வரும் துணை வலியைப் பற்றி, குறித்த பத்திரிகை நிருபர் ஸ்ராலினை வினவியபோது "அமெரிக்க பிருத்தானியர்கள் ஸோவிற் ருஷியர்களுக்கு இதுகாறுஞ் செய்த உதவி மிக அற்ப பயனுடையதென்று சொல்லலாம்; அவர்கள் ருஷியர்களாகிய எங்களுக்கு வாக்குச் செய்த பிரகாரம் உற்றவிடத்து உதவி செய்வரேல் அது எங்களுக்குப் பயன்படும்" என்று சொன்னராம்.

ஸ்ராலின் கூறிய இக்கூற்று அமெரிக்க பிருத்தானிய இராசதந்திரிகட்கும் அந்நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளுட் சிலவற்றிற்கும் சிறிது ஆத்திரத்தை விளைத்து விட்டதென எண்ணக் கிடக்கின்றது. மொஸ்கோ நகரில் இப்பொழுதிருக்கும் அமெரிக்க பிரதிநிதியும் பிருத்தானிய பிரதிநிதியும் ஸ்ராலின் அப்படிக்கூறிய நோக்கமென்ன வென்றும் அப்படி யவர் கூறியதற்குக் காரணமென்னவென்றும் அவரைக் கேட்க விருக்கிறார்களாம். ஸ்ராலின் சொன்ன இச் சில வார்த்தைகள் லார்ட் கலிவாய்க்ஸ் போன்ற பிருத்தானிய இராச தந்திரிகள் சிலரின் உள்ளத்தை நோகச் செய்து விட்டன. பிருத்தானிய மந்திரியாகிய மிஸ்ரர் சேர்ச்சில் முந்தியே ஒரு சந்தர்ப்பத்தில் "ருஷியருக்கு ஏதும் தோல்வி நேர்ந்தால் அது எமக்கு நேரும் தோல்வியென நாம் மதித்துக் கொள்ள வேண்டும்" என்று உறுதியாகக் கூறியுள்ளார். பிருத்தானியரும் அமெரிக்கரும் ருஷிய ஜர்மனிய யுத்தத்திலே தங்களால் இயன்ற உதவியை உலோபமுன்றி மனப்பூர்வமாக ருஷியருக்குச் செய்து வருகிறார்களென்பதை ஸ்ராலின் சிந்தியாமலிருப்பது தவறாகும். மேலும் பிருத்தானியருக்கும் அமெரிக்கருக்கும் ஜர்மனியரைவிட ஜப்பானியராகிய பெரும் பகைவரும் இருக்கிறார்களென்பதையும், ஆனதினால் பிருத்தானியரும் அமெரிக்கரும் ஸ்ராலின் எதிர்பார்த்திருக்கும் அவ்வளவு உதவியை இப்பொழுது செய்ய முடியாதென்பதையும் ருஷிய தலைவராகிய ஸ்ராலின் விளங்கிக் கொள்ள வேண்டும். ஐரோப்பாக் கண்டத்திலே இரண்டாம் யுத்தமுனையொன்றை இன்னும் தொடங்கவில்லை யென்று ஸ்ராலின் பிருத்தானியரையும் அமெரிக்கரையும் குறை கூறுகின்றார். டீப் படையெடுப்பு இரண்டாம் யுத்தமுனையைத் தொடங்குவதற்கேற்பட்ட ஆரம்பமாகச் செய்யப் பட்டதென்றும் காலமுமிடனும் பார்த்து அந்த இரண்டாம் யுத்த முனையைப் பிருத்தானிய அமெரிக்கர் விரைவிலே தொடங்க விருக்கிறார்களென்றும் இராச தந்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். மேலும் பிருத்தானிய அமெரிக்கர் ருஷியாவிற்குப் படைத்துணை செய்வதற்கும் யுத்த உபகரணங்களை யனுப்புவதற்கும் ருஷிய நாடு இப்பொழுது அதிக அநுகூலமான நிலையிலிருக்கவில்லையென்பதையும் ஸ்ராலின் மறந்து விடக் கூடாது. ஜர்மனியரால் இந்தச் சமயத்திற் பெருஞ் சங்கடமுறும் ஸ்ராலின், எங்கள் பிருத்தானியரும் அமெரிக்கரும் தமக்குச் செய்யும் உதவியை மறப்பாராயின் காலகதியில் தமக்கே ஆபத்தையும் தேடிக்கொள்பவராவார். ஆனதால் பிருத்தானிய அமெரிக்கரைப் பற்றி ஸ்ராலின் ஏதும்சொல்லப்புகின் அவர்களை அவர் புகழ்வதே யொழிய இகழ்தல் புத்தியாகாதென்க.

சிறுமியைக் கோட்டிற்சமர்ப்பிக்க மனு

பொலிஸ் அதிகாரி கூறும் விபரம்

யாழ்ப்பாணம், திங்கள்

தன் உத்தரவில்லாமலும் யாழ்ப்பாணம் வேலைக்காரர் ஏஜென்ஸியின் சம்மதமில்லாமலும் தன் மகளாகிய செவி அல்லது சிலாவதி என்னும் மைனர்ப் பெண்ணை யாழ்ப்பாணம் வேலைக்காரர் ஏஜென்ஸியிடமிருந்து சட்டவிரோதமாகவும்பிழையாகவுங் கூட்டிச்சென்ற யாழ்ப்பாணம் பொலிஸாரிடமிருந்து அவளைப்பெற்றுத் தரும்படி வெலிகமத்தைச் சேர்ந்த பொரனை அடப்போகடாகே ஹிச்சி அப்புஹாமி சுப்றீங்கோட்டுக்கு அனுப்பப்பெற்ற மனுபற்றிச் சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர். குவிண்டன் பெர்னாண்டோவால் விசாரணை நடத்தப்பட்டது.

அதுகாலை யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ்சுப்பிறிண்டெண்ட் மிஸ்டர். எஸ். ஜீ. டி. செய்ஸா கூறியதாவது:-

போன தவணையின்போது அப் பெண்ணின் விலாசமும் அவள் யார் என்பதும் எனக்குத் தெரியாமலிருந்தது. அதன்பின், நான் அவற்றை விசாரித்தேன். (இக்கிழமையில் அவர் கோட்டாரிடம் இரு சத்தியக் கடுதாசிகளைக் கொடுத்தார். அவற்றில் ஒன்று மனுதாரராலும் மற்றது பெண்ணின் தாயாலும் முடிக்கப்பட்டவை.

இந்தச் சத்தியக் கடுதாசிகளிலிருந்து தங்கள் புதல்வியின் இப்போதைய யாழ்ப்பாண விலாசத்தை அவள் பெற்றோர்கள் அறிந்திருப்பதாகத் தெரிகிறது. இவ்வருஷம் ஆகஸ்ட்மீ வெலிகமைப் பொலிஸார் சிறுமியின் விலாசத்தை அவளது பெற்றோருக்கு அறிவித்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வேலைக்காரர் ஏஜென்ஸியின முதலாளி ஹேவவிதாரணை எனக்குத் தொந்தரவை யுண்டுபண்ணவும் நோக்கத்தோடு வேண்டுமென்று முயற்சித்தார். இவர் பொய்சொல்லி அழைத்துக்கொண்டு வந்திருக்குஞ் சிறு குழந்தைகளைப் பாதுகாக்கும் பொருட்டு நான் விசேஷ நடவடிக்கை எடுத்துக்கொண்டதின் பலனும் ஹேவவிதாரணைக்கு என் மீது விரோதமேற்பட்டது.

நீதிபதி குறித்த மனுவைச் சுப்ரிம் கோட்டுக்குத் திருப்பியனுப்பினர்.

"ஜப்பான் கட்டுக்கதை"

இப்பொழுது பகைவர்களாயுள்ள ஜப்பானியர் தங்கள் வானொலிமூலமாக மெய்யல்லாப் பல சமாசாரங்களை மெய்யெனவும், தங்கள் தோல்வியை வெற்றியெனவும், சிறுவெற்றியைப் பெருவெற்றியெனவும் உண்மையல்லாத வதந்திகளைப்பரப்பி இங்குள்ள இராசவிசுவாசமான சாமானிய மக்களை ஏமாற்ற வருகிறார்கள்; இவர்களை ஏங்க வைக்கிறார்கள்; இப்படியான தீமைகளை நீக்கிச் சாமானிய சனங்களை அச்சம் முதலியனவின்றி இராச விசுவாசத்துடன் வாழச் செய்யும் வண்ணமே "ஜப்பான் கட்டுக்கதை" எனப்படும் இச்சிறியநூல் இலகுவான தமிழ் வசன நடையில் எழுதியச்சிட்டு அரசினர் சமாசாரப் பகுதியாரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இச்சிறிய பிரதியை இங்குள்ள தமிழ்மக்களெல்லாரும் வாசித்துப் படித்து உண்மையையுணர்ந்து அச்சமகற்றி அரசவிசுவாசத்துடன் வசித்தல் நன்றாகும். எமக்கு உதவிய பிரதியின்பொருட்டு நன்றி கூறுகின்றோம்.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்)

எப்படிச் சங்கீதம்?

சுந்தரேசுவரன் குமாரசுவாமியென்னுமிருவரும் போதற்குப் பத்து நிமிஷம்முந்திச் சங்கீதக் கச்சேரி தொடங்கி விட்டது; ஆனால் காஞ்சனமாலை பாடுவதற்கு அரைமணிநேரம் வரையிலிருந்தது. காஞ்சனமாலை அறையவையில் அங்கு வந்தனளோ வரவில்லையோ என்பதைச் சுந்தரேசுவரன் அறிய ஆவலாக விருந்தான்; சிறிது நேரம் முருகர் சுந்தரேசுவரன் வந்துவிட்டானோ என்று பார்த்துத் திரிய, சுந்தரேசுவரன் முருகம்மான் எங்கிருக்கிறாரென்று தேடுகற்றில் முருகரைக் கண்டான். "தம்பி, வாரும், உம்மைத்தான் பார்த்துக் கொண்டு நிற்கிறேன், இப்படி இந்த நாற்காலியில் இருக்கலாம். இவர் தம்பியை எனக்குத் தெரியவில்லை" என்று குமாரசுவாமியைச் சிறிது உற்றுப் பார்த்துவிட்டு, "ஓம், ஓம், தெரிகிறது எங்கள் சின்னத்தம்பியின் மகனல்லவா? இரண்டுபேருமாவந்தீர்கள்? ஐயா அம்மா தங்கைச்சியொருவரும் வரவில்லையோ? 'காறி'லேதானே வந்தீர்கள்; இப்படியிருங்கள்" எனப் பல வினாக்களையுங்கேட்டு இருவரையும் இருநாற்காலிகளில் இருக்கச்செய்தார். நாற்காலியில் இருந்துகொண்டு, முருகர் கேட்ட கேள்விகளுக்கெல்லாஞ் சுந்தரேசுவரன் பதில்சொன்னான். "அவர்களை இன்னமுங் காணோம், என்னகாரணமென்று தெரியவில்லை, நீங்கள் இப்படியே இருங்கள், நான் தெருவாசலில் நின்று பார்த்து, வந்தவுடன் இங்கே கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு முருகர் முருகேசபிள்ளையின் ரதம் வருகிறதோ என்று பார்க்கும்பொருட்டுத் தெருவாசலிற்போய் நின்றார்; இரண்டொரு நிமிஷத்தில் முருகேசபிள்ளையின் ரதம் வேகமாக வந்துநிற்பதை முருகர்கண்டு இரதத்திற்குச் சமீபமாகச் சென்றார். அதிலிருந்து முருகேசபிள்ளையும் மகளும் ஒரு பணிப்பெண்ணும் இறங்குவதை முருகர்கண்டு "ஏன் அம்மா வரவில்லையோ" என்று கேட்க, முருகேசபிள்ளை 'இல்லை அவர்கள் வர வசதிப்படவில்லை" என்று சொல்லிவிட்டுத் தம்மகளைப் பணிப்பெண்ணுடன் கூட்டிக்கொண்டு போய்ச் சங்கீதக்கச்சேரி நடக்கும் மேடையின் பின்புறத்துள்ள அறையில் விடுத்து அங்குள்ளவர்களுக்குத் தாம் சிறிது பிந்திவந்ததற்குக் காரணத்தையும் சொல்லிவிட்டு, முருகரோடு முற்பக்கத்தில் வருதலும், முருகர் முருகேசபிள்ளைக்குச் சுந்தரேசுவரன் அங்கு வந்திருக்குஞ் செய்தியைச் சொல்லி, அவனும் குமாரசுவாமியும் இருக்குமிடத்திற்கணித்தாக ஒரு நாற்காலியில் முருகேசபிள்ளையை அழைத்துக்கொண்டுபோய் இருக்கச்செய்தார். முருகேசபிள்ளை நாற்காலியிலிருந்துகொண்டு சுந்தரேசுவரனைப்பார்த்து "தம்பிதான் தனியே வந்ததோ! ஐயா அம்மா எவரும் வரவில்லையோ" என்று மெல்ல வினவுதலும் "அவர்கள் இன்று வரவசதிப்படவில்லை, நானும் இவரும்தான் வந்தோம்" என்று தன் பக்கலிலிருந்த குமாரசுவாமியைச் சுட்டிக்காட்டிச் சுந்தரேசுவரன் மறுமொழி சொன்னான்; "அவரை எனக்கு விளங்கவில்லை" என்றுபின்னரும் முருகேசபிள்ளை கேட்க, அதற்கிடையிற் குமாரசுவாமியைப் பற்றிய வரலாறு முழுவதையும் முருகர் முருகேசபிள்ளைக்கு மெல்லச்சொன்னார். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் பாட்டுக்கச்சேரி மண்டபத்தின் முன்திரை அகற்றப்பட, அங்கே காஞ்சனமாலை சாரதாவைப்போலப் பிரகாசித்தவளாய்ப்பாடியவண்ணம் காணப்பட்டாள். அக்கன்னிகையின் சங்கீதத் திறமை ரூபலாவண்ணியம் முதலியவைகளை அங்குள்ளாரெவரும் முந்தியே அறிவரல்லவா? ஆனால் குமாரசுவாமிமாத்திரம் முந்திப் பார்த்தும் கேட்டும் அறியான். அவனும் பெரிதும் அற்புதமடைந்தவனாய்ப் பார்த்தபடியும் கேட்டபடியும் இருந்தான். சுந்தரேசுவரன் தன்பக்கலிலிருந்த குமாரசுவாமியைப் பார்த்து "எப்படிச் சங்கீதம்" என்று மெல்ல வினவ, "நன்றாயிருக்கின்றது" என்று குமாரசுவாமி சொல்லிவிட்டு "இந்தப்பிள்ளை ஆர்" என்று இரகசியமாகக் கேட்டான்.

"உங்கட்கு வேண்டியவர் எனக்கும் வேண்டியவரே"

"இங்கேயிருக்கும் இப்பிரபுவின் மகள்; பெயர் காஞ்சனமாலை, சங்கீதத்தில் எவரும் நிகரற்றவள்; இவளுடைய பேரழகை நீயே நேரிற் பார்க்கலாமே; இவர்கள் அதிக செல்வஞ் செல்வாக்குடையவர்கள்; நல்ல குணமான கன்னிகை; சாதிமுறையிலும் குறைந்தவர்களல்ல" என்று குமாரசுவாமியொழிய வேறெவருங் கேளாதபடி மெல்லச் சொல்லி முடித்தான். சுந்தரேசுவரன் இன்னமும் அவளைப்பற்றி அதிகம் சொல்லியிருப்பான்; ஆனால் அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால் அவளுடைய அரிய சங்கீதத்தைத் தானுங்கேளாமல், குமாரசுவாமியையுங் கேட்கவிடாமல் இடையூறு செய்வதாக முடியுமென்றெண்ணித்தான் அவ்வளவில் நிறுத்தான். இப்படி இவன் சொன்னபின்பே, "இந்தப் பெண்ணைத்தான் சுந்தரேசுவரனுக்கு முருகர் கலியாணம் பேசியிருக்கிறார் போலும்" என்று குமாரசுவாமி தன்னளவில் அயிர்த்தான். ஆயினும் அவன் அந்நேரத்தில் அதை யிட்டு ஏதும் அறியாதவன்போல், எல்லாங் கேட்டுக்கொண்டு பேசாமலிருந்தான். சில நிமிஷங்கள் செல்ல, காஞ்சனமாலையின் சங்கீதம் முடிவுற்றது; அவள் அந்த இடத்திலிருந்து அகன்றாள். ஒருவர் முருகேசபிள்ளையிடம் வந்து "ஐயா, உங்களைத் தங்கைச்சி அங்கே வரட்டுமாம்" என்று சொல்லிக் கூட்டிக்கொண்டுபோனான்; முருகரம்மானும் உடன் கூடிக்கொண்டு போனார். சிறிது நேரஞ்செல்ல முருகரம்மான் மீண்டு சுந்தரேசுவரன் இருக்குமிடத்திற்கு வந்து "தம்பி, அவர்கள் இப்பொழுதே வீட்டிற்குப் போகிறார்களாம்; ஆனதால் உமக்குச் சொல்லிவிட்டுப் போகும்படி தயவுசெய்து ஒரு கால் "காற"டிக்கு வரும்படி சொன்னார்கள்" எனவும், சுந்தரேசுவரன் குமாரசுவாமியையும் உடன்கூட்டிக்கொண்டு முருகேசபிள்ளையின் ரதம் நிற்குமிடத்திற்குச் சென்றான். "நாங்கள் இப்பொழுதே வீட்டிற்குப் போகவேண்டியிருக்கிறது; ஆனதால் உங்களுக்குச் சொல்லிவிட்டுப் போகும்படி கூப்பிட்டோம்; நீங்கள் இன்னும் சிறிதுநேரம் இருந்துவிட்டு வரப்போகிறீர்களோ! இல்லையேல் இப்பொழுதே புறப்படப்போகிறீர்களோ" என்று சுந்தரேசுவரனை முருகேசபிள்ளை கேட்க, சுந்தரேசுவரன் குமாரசுவாமியின் முகத்தைப் பார்க்க, குமாரசுவாமி 'உம்முடைய பிரியம்போற் செய்யலாம் தம்பி" என்றான். இதற்கிடையில் காஞ்சனமாலை, "நீங்கள் எப்படியானும் போகும்போது எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டுத்தானே போவீர்கள்" என்று சுந்தரேசுவரனுக்குச் சொன்னாள். சுந்தரேசுவரன் குமாரசுவாமியைக் காட்டி "இவர் எனக்குத் துணையாக வந்தவர்; இவரைவீட்டில் நேரத்திற்குக் கொண்டுபோய் விடவேண்டும்; அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன்" என்றான; "அவர் உங்களுக்கு ஆர் என்பதை நான் அறியலாமோ" என்று இனிமை தொனிக்க ஆர்வத்துடன் குமாரசுவாமியை உற்றுப்பார்த்தபடி சுந்தரேசுவரனைக் கேட்டாள்; "இவர் எங்களுக்கு வேண்டியவர்; எனது உற்றசகோதரம் போன்றவர்..." என்று சுந்தரேசுவரன் சொல்லி முடிப்பதற்கிடையில், காஞ்சனமாலை "உங்களுக்கு வேண்டியவரானால் எனக்கும் வேண்டியவர்தாமே, அவர்களையும் அழைத்துக்கொண்டு தவறாமல் வாருங்கள்; நான் எதிர்பார்த்த வண்ணமிருப்பேன்" என்று சொல்லுதலும், "உமது விருப்பப்படி செய்கிறேன்" என்று சுந்தரேசுவரன் சொல்ல, அவள் சுந்தரேசுவரனிடத்தும் குமாரசுவாமியிடத்தும் விடைபெற்றுக்கொள்ள, இரதம் புறப்பட்டது. முருகரம்மானும் அவர்களுடன் போனார். இருவரும் சங்கீத மண்டபத்தில் மீண்டு வந்திருந்தனர். ஆயினும் சுந்தரேசுவரன் காஞ்சனமாலை வீட்டிற்கு உடனே போகவேண்டுமென்ற விருப்பங்கொண்டவனாய், தன் பக்கத்திருந்த குமாரசுவாமியைப் பார்த்து "அண்ணை, இனி இங்கே சிறந்த காட்சியைக் காணவும், சங்கீதத்தைப்பார்க்கவும் காத்திருப்பதிற் பயனில்லையென்றெண்ணுகிறேன்; அவர்களும் தங்கள் வீட்டிற்கு வந்து போம்படி சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள்; எங்களை எதிர்பார்த்தவண்ணம் இருப்பார்கள்; ஆனதால் நாங்கள் இப்பொழுதே அவர்கள் வீட்டிற்குப் போய், அங்கே அதிகநேரம் நில்லாமல் எங்கள் வீடுகளுக்கு மீண்டு போவோம்; உங்கள் எண்ணம் என்ன அண்ணை" என்று கேட்க, குமாரசுவாமி "தம்பி உம்முடைய எண்ணத்தின்படி செய்யலாம்; எனக்கு எதுவுஞ்சரி" என்றான். "இல்லையேல் இங்கே இன்னுஞ் சிறிதுநேரமிருந்து பார்த்துவிட்டு நேரே எங்கள் வீட்டிற்கே போகலாமோ" எனப் பின்னருஞ் சுந்தரேசுவரன் கேட்க "அது சரியல்லவே, அப்படியானால் நீர் இப்பொழுது வர வசதியில்லையென்று முந்தியே அவர்களுக்கு மறுத்துச் சொல்லிவிட்டிருக்கலாம். அவர்களுக்கு ஓம் சொல்லிவிட்டு அவர்களைக் காக்கவைத்து நாம் அங்கேபோகாமல் நேரே எங்கள் வீடுகளுக்கு மீண்டுபோவது முறையல்லவே" என்று குமாரசுவாமி தடுத்துச்சொன்னான். "அப்படியானால் அண்ணை, நீரும் அங்கே என்னுடன் வருகிறீரா" என்று அவன் கேட்க, இவன் "தம்பி நான் இங்கேயிருக்க நீர்மாத்திரம் போய்ச் சீக்கிரம் இங்கே மீண்டு வருவது நல்லது" என்றான். "அப்படியல்ல, அண்ணை, என்னை நீர் தனியே போகவிட்டதை அறிந்தால் உங்களம்மாவும் எங்களம்மாவும் மனம் வருந்துவார்களே" என்று சாதுரியமாகச்சொன்னான் சுந்தரேசுவரன். "ஓம் தம்பி, நான்நினைத்ததும் சொன்னதும் தவறு; நானும் உடன்வருகிறேன்" என்று குமாரசுவாமி சொன்னான்; இருவரும் புறப்பட்டு இரதத்தில் ஏறிக்கொண்டு முருகேசபிள்ளை வீட்டிற்குப் போவாராயினர்.

"நீங்களும் இடையிடையே வந்துபோங்கள்"

முருகேசபிள்ளையின் வீட்டுவாசலிற் சென்ற மாத்திரத்தே இரதத்தை நிறுத்தச்செய்து சுந்தரேசுவரன் முந்தியே ரதத்திலிருந்து இறங்கி "அண்ணை ஏன், வரவில்லையோ" என ஆவலுடன் கேட்க "தம்பி, நான் இங்கேதானே இருக்கிறேன், நீர் அவர்களைக் கண்டுகொண்டு காலதாமதமில்லாமல் வாரும்" என்று சொன்னான். "அப்படியல்ல, அண்ணை, இருவரும் ஒருங்குவந்து நீர் காரில் இருக்க நான் மாத்திரம் உங்கேபோய் அவர்கள் செய்யும் உபசாரத்தை ஏற்றுக்கொண்டு வருவது சரியல்ல; அல்லாமலும் இருவரையும் வந்து போகும்படிதானே சொன்னார்கள்; நீங்கள் வராவிட்டால் எனக்கும் மனஆறுதல் இராது; அவர்களும் கவலைப்படுவார்கள்; ஆனதால் தயவுசெய்து நீங்களும் வாருங்கள்" என்று இரந்தான் சுந்தரேசுவரன். "இதில் ஒரு குறைபுமில்லை, தம்பி, நீர் மனம்வருந்தாமற் போய்வாரும்" என்று குமாரசுவாமி சமாதானஞ்சொல்லி ஒருவாறு சுந்தரேசுவரனை மாத்திரம் அங்கே போகவிட்டுத் தான் இரதத்திலேயே இருந்தான்.

சுந்தரேசுவரன்குமாரசுவாமியென்னுமிருவருடைய வரவையும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தகாஞ்சனமாலை சுந்தரேசுவரன் மாத்திரம் வரக்கண்டு "உங்களுடன் வந்தவர் எங்கே' என்று கேட்க, "அவர் காறிலேதான் இருக்கிறார்; இங்கேவரக் கூச்சப்படுகிறார்" என்று சொல்லுதலும், காஞ்சனமாலை "என்ன கூச்சம்; வாருங்கள் அவரை அழைத்துவருவோம்" என்று முற்பட்டுச் செல்ல, சுந்தரேசுவரனும் அவள் பிறகே போனான். "ஏன் உங்கேயிருப்பான்? எங்களோடு என்னகோபம்? எழுந்து வாருங்கள், வாருங்கள்" என்று ஆர்வத்துடன் இனிமை பிறக்கச் சொல்லி அவள் ரதத்தின் கதவைத்திறக்க, குமாரசுவாமி "ஓம் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு இறங்கி இருவரும் முன்செல்லத் தான் பின்னே சென்றான். இருவரையும் நாற்காலிகளில் இருக்கச் செய்துவிட்டு காஞ்சனமாலை வியப்புடன் ஒரு புறத்தே நிற்க, "ஏன் நிற்பான் இருக்கலாமே" என்று சுந்தரேசுவரன் சொல்ல, அவள் தன் பக்கத்திலுள்ள ஒரு சோபாவில் உடனே யிருந்தாள். குமாரசுவாமி நிலத்தைப் பார்த்தவண்ணம் ஒன்றும் பேசாமலிருக்கக்கண்ட காஞ்சனமாலை "என்ன, பெண்களாகிய எங்களுக்குரிய நாணத்தை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள் போற் காணப்படுகிறது" என்று குமாரசுவாமியை நோக்கிச்சொல்ல, சுந்தரேசுவரன் "நீங்கள் விட்டபடியாற் போலும் அவர் அந்நாணத்தை எடுத்துக்கொண்டார்; இருபாலாரும் கைவிட்டால் நாணம்போய் ஒதுங்குவது யாரிடத்தில்" என்று வேடிக்கையாகச் சொன்னான்; அவ்வார்த்தையைக் கேட்டபோது தலை குனிந்தபடியிருந்த குமாரசுவாமி சற்று நிமிர்ந்து புன்னகை செய்தான்; அவன் புன்னகை செய்தமையை அவதானித்த காஞ்சனமாலை சிறிது முகவாட்டமுற்றாள். ஆயினும், அவள் தன் முகக் கோட்டத்தை உடனேமாற்றி மகிழ்ச்சியடைந்தாள்போல், சுந்தரேசுவரனைப்பார்த்து "இவர் உங்களுடைய இனத்தவரா? நண்பரா? இல்லையேல், உங்களுடன் ஒருங்கு படிப்பவரா? கேட்டேன் என்று குறையெண்ணுநீர்கள்" என்று வினவினள். "இவர் எனக்கு இனமானவருந்தான்; உற்ற நண்பருந்தான்; சகபாடியுந்தான்; இவைகளைவிட எனக்கு உபாத்தியாயராகவுமிருக்கின்றார்" என்று பதில் சொன்னான்; இதற்கிடையில் அங்குள்ள பணிப்பெண் ஏதோ சிற்றுண்டி ஒரு தட்டில் இட்டுக்கொண்டுவர, காஞ்சனமாலை அதனைவாங்கித் தானே அவர்களுக்கு முன்னருள்ள மேசையில் வைத்து இருவரையும் அருந்தும்படி கேட்க, அவர்கள் அருந்தும்போது அந்தப் பணிப்பெண்ணே மீண்டுபோய் இருபாத்திரங்களில் தேநீர் நிறைத்துக்கொண்டுவர, காஞ்சனமாலை அவைகளையும் வாங்கி அவ்விருவர் முன்னிலையில் வைக்க அவர்கள் அருந்தினர். குமாரசுவாமி தனக்குச் செய்யப்படும் உபசாரங்களையெல்லாம் அன்போடு ஏற்றுக்கொண்டு பின்னரும் மௌனமாயிருக்கக்கண்ட காஞ்சனமாலை, அவனுடைய கல்வியைப்பற்றி விசாரிக்க, அதற்குத்தக்க பதிலை மிக மரியாதைபோடு சொன்னான்; குமாரசுவாமியின் பேச்சும், அவன் மரியாதையாக ஊடாடும் முறையும், விநயமும், இயற்கையாக அவன் முகத்திலே தோன்றும் கல்வித்தேசசும் காஞ்சனமாலையின் உள்ளத்தில் ஒருவகையான கவர்ச்சியையும் அற்புதத்தையும் ஆக்கின. சுந்தரேசுவரனைக்காட்டிலும் அவன் அதிக விவேகி அறிவாளி சதுரமுள்ளவன் என்று குமாரசுவாமியைப்பற்றி அவள் பலவாறு மதித்துக்கொண்டாள். இதற்கிடையில் தலைவாசற்பக்கத்திலிருந்த முருகேசபிள்ளை "தங்கைச்சி, அகாலமாகிறது, அவர்களை நெடுநேரம் தாமதிக்கச்செய்வது சரியல்ல; வீட்டிலுள்ளார்தேடுவார்கள்" என்றுதமது மகளுக்குச் சொல்லுதலும்"ஓம்ஐயா"என்றுஅவள்சொல்லிவிட்டுத் தங்கள் வேலைக்காரியைக் கூப்பிட்டு, "காறில் இருக்கும் ஆளுக்கு ஏதுங் கொண்டுபோய்க் கொடுத்தாயோ" என்று கேட்க, "ஓம் சின்னம்மா" என்று அவளுஞ் சொன்னாள். சுந்தரேசுவரனும் குமாரசுவாமியும் போதற்கு எழுந்தார்கள்; காஞ்சனமாலையும் உடன்எழுந்து அவர்களை வழிவிடப்போதலும், அவர்கள் தலைவாசற்பக்கமாகவர முருகேசபிள்ளையுமெழுந்து கூடிக்கொண்டு சென்றார். இருவரும்போய்க் காறில் ஏறினர்கள். "இவர் வரும்போது நீங்களும் இடையிடையே கூடிக்கொண்டு வந்துபோங்கள்" என்று குமாரசுவாமிக்குச் சொல்லி அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு காஞ்சனமாலை தன் தகப்பனுடன் மீண்டு வந்தாள். (வரும்)

கழிவுப் பொருட்களைச் சேகரித்தல்

பிரசார ஆரம்பம்

பொதுஜனங்களின் ஆதரவு

கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் பிரசாரம் சென்ற திங்கட்கிழமை கொழும்பு நகரசபைப் பகுதியில் ஆரம்பமாயிற்று. இதையொட்டி விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்குப் பொதுமக்களிடமிருந்து சிறந்த பதில் கிடைத்திருக்கிறது. திங்கட்கிழமை முழுவதும் திட்டத்தின் பிரகாரம் ஏராளமான கழிவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. இவ்விஷயத்திற் பொதுமக்கள் இவ்வளவு ஆர்வமாக ஒத்துழைப்பாரென்று எதிர்பார்க்கப்படவில்லை.

திங்கட்கிழமை கிடைத்த கழிவுப் பொருட்களில் நூற்றுக்கு 60பங்கு உபயோகமற்ற கடுதாசியும் பிரதானமாகப் புதினப்பத்திரிகையுமே என்று மதிப்பிடப்பட்டது. அதிகரித்து வரும் கழிவுப் பொருட்களுடன் பழைய இரும்புக்குழாய்கள் கம்பிகள்சட்டங்கள் காஸ்வாய்க்குழாய்கள் முதலியனவும் கிடைத்திருக்கின்றனவென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

போத்தல்கள் கிடைக்கவில்லை

மருதானையைச் சேர்ந்த மத்திய கழிவுப் பொருட் சேகரிப்பு ஸ்தலத்தில் மிக அவசியமான போத்தல்கள் மட்டும் காணப்படவில்லை. உள்நாட்டில் இப்பொழுது போத்தல்கள் கிடைப்பது அரிதென்பதும் இவை அத்தியாவசியமானவையென்பதும் இச்சந்தர்ப்பத்திற் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் பல வாசஸ்தலங்களின் தோட்டங்களில் வீசப்பட்டிருக்கும் நூற்றுக் கணக்கான போத்தல்கள் சிலதினங்களிற் கிடைக்குமென்று நம்பப்படுகிறது.

பழைய றப்பர் டயர்கள், சைக்கிள்களின் உதைப்புகள், பழைய வெள்ளீய கேத்தல்கள், பாத்திரங்கள் முதலியனவும் சேகரிக்கப்பட்டன. மேலும், ஏராளமான பொருட்கள் கிடைக்கக்கூடியதாக விருப்பதால், ஏற்கெனவே விளம்பரஞ் செய்யப்பட்டவாறு வாரமொரு முறை சேகரிப்பதற்குப் பதிலாக அடிக்கடி சேகரிப்பதற்கு அதிகாரிகள் ஏற்பாடுசெய்திருக்கின்றனர்.

உமா

பிரம்மஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்

அம்பாளுடைய இந்த நாமமானது விசேஷமான பெருமையையுடையது. உகாரமானது சிவசக்தியான அட்சரம். மா என்று இலக்குமிக்குப் பெயர். எனவே சிவனுடைய சௌபாக்கிய ரூபிணியாக இருப்பவள் என்பதாம். அல்லது பரம்பிலை அகண்டமான பரப்பிரமத்தை அளவிடங்கும்படியாகச் செய்பவள் என்றுங் கூறலாம்.

உமா என்னும் பதத்திற்கு, உமா அதஸீ, ஹைமவதி, ஹரித்ரா, கீர்த்தி, காந்திஷு, என்னும் பிரமாணப்படி அதஸீ, சணப்பூ, மஞ்சள், கீர்த்தி, காந்தி என்ற கருத்துக்களுண்டு. அப்படியான ரூபங்களோடிருப்பதால் உமா என்ற பெயர்.

பிரணவத்தினுடைய அம்சங்களான அகார, உகார, மகாரங்கள் முறையே விஷ்ணு, சிவ, பிரமா இவர்களைக் குறிக்கும். இந்த மூன்றுஞ் சேர்ந்த உமா என்ற பதமாகிறபடியால் திரிமூர்த்தி ரூபத்தையுடையவள் அம்பாள் எனச் சொல்லப்படுகின்றது.

இந்நியாயத்தினால் உமா என்ற பதமானது தேவிப் பிரணவமென்று ஆன்றோர் கூறுவர். சிவப்பிரணவத்தில் அகார, உகார, மகாரங்களும், தேவிப் பிரணவத்தில உகார, மகார, அகாரங்களும் முறையாக இருக்கின்றன. இந்நிரூபத்தைக் கொண்டே லிங்க புராணத்திலும், 'ஓங்காரஸாரசக்திர்யாத் உமேதி பரிகீர்த்திதா' எனக் கூறப்பட்டிருக்கிறது.

எல்லாப் பிராணிகளும் உறங்கும்போதும், விழித்திருக்கும்போதும், அவர்களுடைய இருதயத்தில், அநாகத நாதமென்று சொல்லப்படுவதும், அகார, உகார, மகாரங்களான இந்த மூன்றுமாத்திரைகள் தனிமையாக உலாவுவதும், பிரணவ நாதத்தின் பாகமானதும், எப்பொழுதும் உச்சாரணம் பண்ணப்படுவதும், இருதய கமலத்தில் தஹராகாசரூபமாயிருப்பதுமான சிவனுடைய சிரசிலிருக்கும் விந்து ரூபமான சக்திக்கு உமா என்று சொல்லப்படும்.

'இச்சாசக்திருமாசீ' என்னும் வசனப்படி, பரமபாவ பாவத்தையடைந்த யோகிகளுடைய இச்சாசத்திக்கு உமா என்று பெயர்.

'உமாதேவா விநாயகே' என்றபடி விநாயக பீடத்திலும், உமாசிந்தவனே நாம என்றபடி சித்தவனத்திலும் அதிஷ்டானமாயிருக்கும் அம்பிகாரூபத்திற்கு உமா என்று பெயர்.

'உமாஷட்வார்ஷிகீமதா' என்றபடி ஆறுவயதுள்ள கன்னியாகவிருப்பவள் உமா.

உ என்றால் உத்தமமான, மா சித்த விருத்தி இல்லாதமான ரூபத்தையுடையவள் உமா.

உ என்பது கூப்பிடும்போதும், மா என்பது தடுக்கும்போதும் உபயோகிக்கப்படும் பதங்கள். அம்பாளை மலையரசனுக்குப் புத்திரியாகப் பிறந்து கடுமையாகத் தவஞ்செய்யத் தொடங்கும்போது தாயாராகிய மேனை யென்பவள் கூப்பிட்டுத் தடுக்கப்பட்ட சரிதமிருக்கிறது.

இருதய கமலத்தினின்று மேலே போகும்போது துரியம் என்னும் அவஸ்தை உண்டாகிற தென்றும் லிங்கத்தின் சிரோபாகத்தில் உமா ரூபமான நாதத்திலயமடைதலால் துரியாதீத அவஸ்தை உண்டாகிற தென்றும் கூறப்பட்டிருக்கிறது.

காந்திஜீ ஜயந்தியில் கலவரம்

பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

புதிய டில்லி அக் 3

நேற்றுக் காந்திஜியின் பிறந்த தினத்தைக் கொண்டாடு முகமாக ஊர்வலங்கள் நடத்துவதற்குச் செய்த முயற்சிகளை யொட்டிக் கலகங்கள் நடைபெற்றன. சாந்தினிச் சவுக்கத்திலும் அதற்குச் சமீபத்திலும் பொலிஸார் கலகக் கூட்டத்தின் மீது நேற்றுமாலை இரண்டுமுறை துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். அதன் விளைவாக ஒருவர் காயமடைந்தார். முதன்முறை பொலிசார் ஜனக்கூட்டத்தைக் கலைத்துச் செல்லும்படி உத்தரவிட்ட பொழுது, அவர்கள் பொலிசார்மீது செங்கட்டிகளை விட்டெறிந்தனரென்று உத்தியோக வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. பொலிசார் குறுந்தடிப் பிரயோகஞ் செய்து ஒரு முறை துப்பாக்கியையும் பிரயோகித்தனர். இதனால், உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. பின்னர் 2000 பேர்களடங்கிய கூட்டமொன்று சாந்தினி சவுக்கத்தில் கூடியது. அங்கு மீண்டும் பொலிசார்மீது கற்கள் வீசப்பட்டன. அதன் பேரில் அவர்கள் பன்னிரண்டு முறை சுட்டனர். அதன் விளைவாக ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமுற்றார். குறுந்தடிப் பிரயோகத்தினால் மற்றும் இருவர் காயமடைந்தனர்.

காந்திஜியின் பிறந்த நாட்கொண்டாட்டத்தின் ஒரு அம்சமாகப் பல பாடசாலைச் சிறுமிகளும் வயதான ஸ்திரீகளும் வெளியில் திரிந்து மகாத்மாவின் படங்களை விற்றனர்.

டாம்லுக் (மிட்னப்பூரிலுள்ள) அரசாங்க வருமானக் காரியாலயமும் உதவி ரிஜிஸ்திரார் காரியாலயமும் ஆர்ப்பாட்டக்காரரால் கொளுத்தப்பட்டன. மற்றும் அரசாங்கச் சொத்துக்களும் சேதப்படுத்தப்பட்டன.

கல்கத்தாவிலுள்ள அரசாங்க வருமானக் காரியாலயமும் சப் ரிஜிஸ்ரார் காரியாலயமும் தபாற் கந்தோரும் செப்டம்பர் மாதம் 29-ம் திகதி இரவு இனம் தெரியாதவர்களால் கொளுத்தப்பட்டன. அதே தினத்தில் சுடஹட்ட பொலிஸ் நிலையம் கூட்டமொன்றால் தாக்கப்பட்டது. அங்கிருந்த பத்திரங்கள் கொளுத்தப்பட்டன. அங்கிருந்த சப் இன்ஸ்பெக்டரும் சிப்பாய்களும் தப்பியோடி விட்டனர். அரசாங்க வருமானக்காரியாலய உதவி மனேஜரைக் கூட்டம் தூக்கிச் சென்றதோடு அவருடைய துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு விட்டது. நந்திக்கிராமப் பகுதியிலுள்ள [illegible] படிக்கப்பட்டனவென்று மஹிஷாதலிலிருந்து செய்திகள் வருகின்றன.

புதிய பேராதனைப் புகைரத நிலயம் தீப்பற்றியது

பெண்பிரயாணிகள் தங்கும் அறை நாசமாயிற்று

கண்டி அக் 3

இன்று அதிகாலை புதிய பேராதனைப் புகைரத நிலையத்தில் தீப்பற்றியது. இதன் பலனாகப் பெண் பிரயாணிகள் தங்கும் அறையும் மற்றும் பிரயாணிகள் தங்கும் மற்றோர் அறையும் நாசமடைந்தன.

புகைரத நிலைய உதவி அதிகாரிக்குச் சொந்தமான காரொன்று எரிந்துபோய் விட்டது. விநியோகிக்கும் பொருட்டு வைக்கப்பட்டிருந்த சில சாமான்களும் தீக்கிரையாயின. புகைரத நிலயத்துக்கெதிரே புகைரதப் பாதைக்கப்பாலுள்ள பண்டகசாலையொன்று பாதிக்கப்படவில்லை.

புகைரத நிலயத்தின் தளவாடங்களும் பத்திரங்களும் அப்புறப்படுத்தப்பட்டன.

விவசாயப் பகுதியின் தலைமைக் காரியாலயமும் ரசாயன ஆராய்ச்சி நிலையங்களுமுள்ள இவ்விடத்தில் தீயணைப்பதற்குப் போதிய தண்ணீர் வசதியில்லையென்பது இவ்விபத்தின் காரணமாக வெளியாகிறது.

புகைரத நிலைய அதிகாரியின் காரியாலயத்திற்குத் தீ பரவுவதைத் தடுக்கும் பொருட்டுத் தீயணைக்கும் போலீஸ் படைவானிகளை உபயோகித்துக் குழாயிலிருந்து தண்ணீரைப் பெற்றுக் கொள்ள நேர்ந்தது.

அதிகாலை 1 மணிக்குத் தீப்பிடித்த பொழுது புகைரத நிலையச் சிப்பந்திகளில் எவராவது ஸ்தலத்தில் இருக்கவில்லையென்றும் அவர்கள் அபாயம் பற்றிக் கேள்விப்பட்டு அங்கே வருவதற்குள் பெண்கள் தங்குமிடமும் புகைரத நிலையத் தாழ்வாரத்தின் கீழ் நின்ற காரும் தீப்பற்றியதாகத் தெரிகிறது.

காரிலிருந்தே தீப்பிடித்ததாக நம்பப்படுகிறது. இச்சம்பவம் ஏற்பட்டபோதிலும் புகைரதப் போக்குவரத்து வழக்கம் போல நடைபெற்றது. அதிகாலை 3 மணிக்குத் தீ அணைக்கப்பட்டு விட்டது.

எங்கள் அபிமானிகட்கு ஒரு நல்வார்த்தை

பணமுட்டு, பொருள்முட்டு என்னுமிவைகள் சேர்ந்துள்ள இந்த சோதனையிலும் எங்கள் பத்திரிகைப் பிரசுரங்களைத் தந்நம் சொந்தப் பத்திரிகைகள் போலப் பாராட்டி அபிமானித்துப் பொருளுதவி செய்து வரும் பத்திராபிமானிகளுக்கு நன்றிகூறி அவர்களைப் பாராட்டாமலிருக்க முடியாதாகும். இன்னமும் பத்திராபிமானிகளாகவுள்ளவர்களுள் சிலர் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைப் பாக்கியில்லாமலும் முற்பணமாகவும் எமக்குச் செலுத்தி வைப்பரேல் அவர்கள் இந்தத் தரும கைங்கரியத்திற்குப் பெருந்துணை செய்தவர்களாவர். சென்ற மாசத் தொடக்கமாக அநேக புதிய அபிமானிகட்குப் பத்திரிகைப் பிரசுரங்களை அனுப்பி வரலானோம்; அவர்களுட் பலர் எங்கள் வேண்டுகோட்கிணங்கி பத்திரிகைகளை ஏற்றுக்கொண்டனர். சில அபிமானிகள் அப்படி ஏற்றுக்கொண்டு பத்திரக்கிரயத்தையும் முற்பணமாகச் செலுத்தி வரலாயினர். இதுகாறும் அங்ஙனம் பத்திரக் கிரயத்தைச் செலுத்தி வைக்காதவர்கள் இந்த அக்டோபர் மாசம் 10-ந் தேதிக்குள் தங்கள் பத்திரக் கிரயத்தைச் செலுத்தி வைப்பரேல், அப்படிச் செய்தல் எங்கட்குப் பல்லாற்றானும் பெரும் உதவியாகுமென்பதை அவர்கட்கு விநயத்துடன் தெரிவிக்கின்றோம்.

மனேஜர்.

சம்பா அரிசி கிடைப்பதில்லை என்று முறைப்பாடு

கிராமவாசிகளுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டம்

அரிசி விநியோகக் கட்டுப்பாட்டு ஒழுங்கீனங்கள் பாட்டாளிமக்களுக்கு அதிக கஷ்டங்களை உண்டுபண்ணி வருவதாக மேல்மாகாண உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பாட்டாளி மக்களுக்குக் கூடுதலான அரிசி அனுமதிக்கப்பட்டது.

இவர்களுக்கு 'மில்சாட்'பச்சை அரிசி முதலிய ரகங்கள் மட்டுமே அநேகமாக விநியோகிக்கப்படுகின்றனவென்றும், சில பட்டினசபைப் பகுதியிலுள்ள மக்களுக்கு முத்துச் சம்பாவே அநேகமாக விநியோகிக்கப்படுகிறதென்றும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது

மீன்பிடித் தொழிலாளர் கூறும் குறை

சென்ற வாரம் நீர்கொழும்பில் 5 பங்கு முத்துச்சம்பாவும் மற்றொருபாகம் ஏனைய பதில் உணவுப் பொருளும் விநியோகிக்கப்பட்டதென்றும் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் அயற்கிராமங்களான தலஹேனை, பிட்டிப்பனை, துவை, முதலியவற்றிற் பச்சை அரிசி, மாவு அல்லது கோதுமையையே விநியோகிக்கப்பட்டதென்றும் குறிப்பிடப்படுகிறது. இக்கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு மில்சாட் புழுங்கல் அரிசியோ அல்லது முத்துச்சம்பா அரிசியோ வழங்கப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. நகரவாசிகளுக்கும் கிராமவாசிகளுக்குமிடையே இவ்வித வேறுபாட்டை உண்டுபண்ணுவது மிகவும் கண்டிக்கப்படுகிறது. குறிப்பாக மீன்பிடித் தொழில் இலாகா உணவுக்கட்டுப்பாடு இலாகா ஆகிய இரு அரசாங்க இலாகாக்களின் கொள்கைகள் இதன் காரணமாக ஒன்றுக்கொன்று முரணாயிருக்குமென்று சொல்லப்படுகிறது.

மீன்பிடித் தொழிலாளர் தமது தொழில்களை நடத்தாது ஏனைய வேலைகளில் ஈடுபடுவதைத் தடுக்கும்பொருட்டு மீன்பிடித்தொழில் இலாகா இவர்களுக்குப் போதிய அரிசியை விநியோகிக்க விரும்புவதாகத் தெரிகிறதென்று குறிப்பிடப்படுகிறது.

இக்கொள்கைக்கு முரணாக உணவுக் கட்டுப்பாட்டு இலாகா குறித்த தொழிலாளருக்குப் பச்சை அரிசியையும், நகர மக்களுக்குப் புழுங்கல் அரிசியையும் விநியோகிப்பதாகச் சொல்லப்படுகிறது.

மேலும், நகரங்களில் திங்கட்கிழமைகளிலும், கிராமங்களில் புதன்கிழமைகளிலும் அரிசியை விநியோகிப்பது சம்பந்தமாகவும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. புதன் கிழமைகளில் அரிசி விநியோகிப்பதால் அதிக இடைஞ்சலேற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

போதிய முத்துச்சம்பா கிடைக்கக்கூடுமானால், ஏன் சரிவர விநியோகிக்கக்கூடாதென்றும் கேட்கப்படுகிறது. அரிசியை வாங்கும் பொருட்டு இப்பொழுது கச்சேரிகளில் அனுமதிச்சீட்டுகளை விநியோகிக்கும் முறையே இவ்வொழுங்கீனங்களுக்குக் காரணமாகுமென்று சொல்லப்படுகிறது.

திருச்சி றேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

வெள்ளி அக் 9

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 துதிப் பாடல்கள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டி ஆர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 சினிமா கீதம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி ஆர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 மதராஸிலுள்ளபடி லலிதா வெங்கட்ராம் வீணை பாட்டு 5-40 தூரன்-இ-ஷரீப் 6 பி எஸ் அங்கப்ப பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-40 மனோலயம் நாடகம் 8-30 பி எஸ் அங்கப்ப பிள்ளை நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விய

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

காந்திஜீ ஜெனன தினக் கொண்டாட்ட விருந்து

நியூயோர்க் அக் 2—

அமெரிக்காவில மகாத்மா காந்திஜியின் பிறந்தநாளைக்கொண்டாடுவதற்காகவேற்படுத்தியவிருந்து, ஹாரியட் ஹேல்ம்ஷல்யல் என்ற அமெரிக்க கலாசாலை மாணவியும் இந்திய ஆசிரியர் டாக்டர் ஹரிதாஸ் மஜூம்தாரும் மணம் செய்து கொண்டவுடன் நடந்த கல்யாண விருந்தாகவும் ஆய்விட்டது. அமெரிக்காவிலுள்ள இந்தியத் தலைவர்களுள் ஒருவராகிய கேதர் நாத்தாஸ் குப்தா அவர்கள் தம்பதிகளை ஆசீர்வதித்துப் பாராட்டினர். இப்பொழுது நடத்தியிருக்கும் கல்யாணம் மேற்றிசையும் கீழ்த்திசையும் ஒன்று சேர்வதைக் குறிப்பிடுகிறது. இச்சேர்க்கை மகாத்மாஜிக்கு மிக்க சந்தோஷமளிக்குமென்றும் தாஸ்குப்தா குறிப்பிட்டார். காந்திஜி லண்டனுக்கு விஜயம் செய்தபொழுது மஜூம்தார் அங்கு இருந்தார்.

குஷ்டரோகிகளின் பரிதாபம்

இந்த நோயாளர்களாகிய நாங்கள் நோயிலும் மிகக் கொடிய நோயாகிய குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டு ஹெந்தலை என்னும் குஷ்டரோகசாலையில் இருந்து துன்பத்தை அனுபவித்து வருகிறோம். வருடமொருமுறை வருகின்ற இந்துக்களின் புண்ணிய தினமாகிய தீபாவளி யன்று எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்யவும் புதுஆடை அணியவும் நோயாளர்களுக்கு ஆவலிருப்பதால், தருமசீலர்கள் தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
பெ. இராமசாமி

சைலப்பிணியாளர் சங்கத்தின்
காரியதரிசி
—கடித

காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாசாலை

நிகழும் சித்திரபானு வருஷம் புரட்டாதி மாதம் ௧௬௳ 2-10-42 வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாசாலையின் வருடாந்தக் கொண்டாட்டம் மேற்படி வித்தியாசாலைத் திருநாவுக்கரசு நாயனார் மண்டபத்தில் பெறும் சங்கத் தலைவர் திரு. அ. கனகையா அவர்கள் தலைமையில் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமானது. ஆரம்பத்தில் தலைவர் அவர்கள் Sir வைத்திலிங்கம் துரைசுவாமி, திரு M. தம்பிப்பிள்ளை என்பவர்கள் கூட்டத்துக்குச் சமுகமளிக்க இயலாதவர்களாயிருக்கின்றமென எழுதிய கடிதங்களைச் சபையோருக்கு வாசித்துக் காட்டியதன்மேல் 1 முகவுரை உபந்நியாசஞ் செய்தனர். பின்னர் மாணவர் அப்பியாசங்கள் செய்யப்பெற்றன.

இரண்டாவதாக வித்தியாசாலை மனேச்சரவர்களால் தயாரிக்கப்பெற்ற வித்தியாசாலையின் அறிக்கைப் பத்திரம் வரவு செலவு முதலியன வெளியிடப் பெற்றன. மூன்றாவதாகத் திருவாளர்கள் ச. முத்தையா, ச. ஆறுமுகம் அவர்களும், மனேசரவர்களும், தலைவர்களும் குறிப்புரை கூறினர்.

அதன்மேல் மகாத்மா காந்தியடிகளின் ஜெனனதினக் கொண்டாட்டத்தின் பொருட்டு மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் ஆயத்தஞ் செய்யப்பெற்ற மகாத்மா காந்தியடிகளின் சிறிய சரிதையும், அதிலிருந்து நாம் அடையக் கூடிய சத்திய விரதத்தின் மகத்துவத்தையும் ரூபித்துக் காட்டுவதாகிய ஓர் இனிய கதாநாடகம் சபையோர் இன்புறும் வண்ணம் நடித்துக் காட்டப்பட்டது.

ஈற்றில் மனேசரவர்கள் ஸ்தோத்திரங் கூறப்பெற்றதும் வருடாந்தக் கொண்டாட்டம் இரவு 8 மணியளவில் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவேறியது.

—கடித

இலங்கைக்கு அரிசி வசதி

ஸேர். பரனுக்கு இந்தியாவின் உறுதி

புதிய டில்லி அக் 3

அரிசி உதவும் விஷயத்தில் எவ்வளவு தூரம் இலங்கைக்கு உதவியளிக்கப்படுமென்று இந்திய அரசாங்கத்தின் வியாபாரப் பகுதி ஸேர். பரன் ஜெயத்திலகாவுக்கு உறுதி கூறியிருக்கிறதென்று தெரிகிறது.

தான் விஜயஞ் செய்த மாகாண அரசாங்கங்களும் இந்திய அரசாங்கமும் மிக்க ஆதரவு காண்பித்ததுடன் இலங்கை அரசாங்கத்துக்கு முடிந்தவரை உதவியளிக்க வாக்களித் திருக்கின்றனவென்று ஸேர். பரன் ஜெயதிலகா பேட்டியொன்றின்போது தெரிவித்தார். இந்தியா அரிசி சம்பந்தப்பட்ட மட்டில், தன் தேவையையே பூர்த்திசெய்து கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறதென்பதைத்தான் நன்கு உணர்வதாகவும் அப்படியிருந்தும் இந்தியா இலங்கைக்கு உதவி செய்ய முன்வந்திருப்பதற்கு இலங்கை மிகவும் கடமைப் பட்டிருக்கிறதென்றும் ஸேர். பரன் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள இந்தியர்களைப் பற்றிப் பேசுகையில இந்தியர்களுக்கு விரோதமாகச் சட்டமெதையும் அரசாங்கசபை நிறைவேற்றவில்லையென்றும் அரசாங்க வேலைகளில் இந்தியர்கள் அமர்வதற்குத் தடைசெய்யும் சட்டமெதுவும் இல்லையென்றும் அவர் தெரிவித்தார். இலங்கையிலுள்ள வியாபாரிகளாரும் தாங்கள் வியாபாரத்தை நடத்துவதற்குக் கஷ்டமெதுவும் தனக்குத் தெரிந்த மட்டில் இல்லையென்றும் தெரிவித்தார்.

வாக்கு முதலிய அரசியல் விஷயங்களில் அபிப்பிராய பேதம்இருப்பது வாஸ்தவமே யென்றும் அவ்வேற்றுமைகளைத் தீர்க்க டில்லியிலும் கொழும்பிலும் இரண்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளுக்குமிடையே இருமகாநாடுகள் நடைபெற்றன வென்றும் கொழும்பில நடைபெற்றன வென்றும் கொழும்பில் நடைபெற்ற மகாநாட்டின் இறுதியில் இரு அரசாங்கப் பிரதிநிதிகளும் சமர்ப்பித்த கூட்டு அறிக்கை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமுன், ஜப்பான் யுத்தத்தில் இறங்கிவிட்டதென்றும் ஸேர். பரன் கூறினர். யுத்தம் முடிந்த பிறகு அறிக்கையைக் கவனிப்பதென்று இரு அரசாங்கங்களும் முடிவு செய்தன வென்றும் அந்த அறிக்கை ஏற்றுக் கொள்ளப்படுமானல் அபிப்பிராய பேதங்கள் எல்லாம் ஒழிந்து விடுமென்றும் ஸேர். பரன் கடைசியாகத் தெரிவித்தார்.

பம்பாய் அக் 2—

இலங்கை மந்திரி ஸேர். பரன் ஜெயதிலக புதுடில்லியிருந்து பம்பாய் வந்து சேர்ந்தார்.

இந்தியாவில் யுத்தகால மந்திரிசபை

நெருக்கடி தீர ராஜாஜி யோசனை

வைஸ்ராய் பிரதிநிதிகளைப் பொறுக்க வேண்டும்

சென்னை அக் 4

ஸ்ரீமான். ஸி. இராஜகோபாலாச்சாரியர் பின்வருமாறு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்,

காங்கிரஸைச் சேராமல் தனித்து நிற்கும் கோஷ்டியினர்களை யெல்லாம் ஒன்று திரட்டி அவர்கள் ஒரு ஒப்பந்தத்துக்கும் வரும்படிச் செய்து அவர்களைக்கொண்டு காங்கிரஸுடன் போராட ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் இந்திய அரசாங்கம் இவர்களுக்குப் போதிய ஆதரவு அளிக்கவேண்டுமென்றும் "மாஞ்செஸ்டர் கார்டியன்" கூறியுள்ள யோசனை மிக்க ஏமாற்றத்தைத் தருகிறது. கர்னல் அமெரி மிக்க சாமர்த்தியத்துடன் இந்தியாவைப்பற்றி அரைகுறையான உண்மைகளை வெளியிடுவதால் இந்தியப் பிரச்னை தீர்ப்பட்டுவிடாது. யுத்த ஏற்பாடுகளுக்கும் உதவி கிடைக்காது. மிஸ்டர் அமெரி இவ்விதம் உண்மையை மறைத்து மழுப்பிப் பேசுவதைக் கேட்டுக் கொண்டு நேசதேசங்கள் சும்மாயிருப்பது கூடாது. அவ்வப்போது காலஞ் அமெரி இவ்விதம் வெளியிடும் சமாதான அறிக்கைகளை இந்தியாவில உள்ள எவரும் பொருட்படுத்துவதேயில்லை. இந்தியாவில் தங்கி விஷயங்களை அறிந்து தங்கள் சொந்த ஊருக்குத்திரும்பியுள்ள பிரபலஸ்தர்கள் பலர் அமெரிக்காவில் இருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்தியா மந்திரி அமெரிக்கர்களுக்காக இவ்வித அறிக்கைகளை வெளியிடத் துணிந்திருக்கிறார்.

இப்போது யுத்தம் சம்பந்தமான ஏற்பாடுகளுக்குக் குந்தகமாக விருப்பதெல்லாம ஒரு விஷயந்தான் இந்தியர்கள் தற்போது யுத்த விஷயமாகக்காட்டிவரும் அசிரத்தையைவிட்டு மனப்பூர்வமாகவும் தீவிரமாகவும் யுத்த ஏற்பாடுகளில் கலந்துழைக்க வேண்டுமென அரசாங்கத்தார்கோருகிறார்கள்.

மனமுண்டானல் வழியுண்டு

இவ்வித நிலை ஏற்படுவதற்கு வழியுண்டு. இந்தியாவில் சர்வீஸைச் சேர்ந்தவர்கள் சொல்லுவதுதான் இறுதி வார்த்தை யென்றும் அதற்குமேல மனித முயற்சியே இல்லையென்றும் முடிவுகட்டிவிடக் கூடாது.

மனித முயற்சியால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. ஆனல், மனம் தான் வேண்டும். மன முண்டானல் வழியுண்டு. அதுவும் சாதாரண வழியல்ல ராஜாங்க பாதை உண்டு என்றே நான் சொல்லுவேன். பிரிட்டிஷ் பார்லிமெண்டு அடிக்கடி சொல்வது போலத் தங்கள் பொறுப்பையுணர்ந்து நடக்கவேண்டும். வைஸ்ராய் கொண்டுள்ள அச்சத்தையும் த்வேஷத்தையும் விடும்படி சொல்லவேண்டும். இந்தியாவில் பற்பல வகுப்பினரின் மதிப்புக்கும் பாத்திரமாகவுள்ள சிலரை வைஸ்ராய் பொறுக்கி எடுத்து (அவர்கள் சிறையில் இருப்பவராலும் சரி வெளியில் இருப்பவராலும் சரி) யுத்தகாலத்தில் அரசாங்கத்தை நடத்த அவர்களே தமது சகாக்கள் என அறிவித்துவிட வேண்டும். ராணுவ காரியங்கள் மட்டும் இப்போதிருப்பது போலப் பிரிட்டிஷ் மந்திரிசபையின ஆதிக்கத்திலும் மேற்பார்வையிலுமே யிருக்கட்டும். ஸேர். கிரிப்ஸ் வந்திருந்தபோது காங்கிரஸ் இதை ஒப்புக்கொண்டிருக்கிறது. வைஸ்ராய் சிறையிலிருப்பவர்களை நியமித்து அப்பதவியை ஏற்படுத்த மறுப்பதோ அவர்களின்பொறுப்பில் விட்டுவிட வேண்டும். வெளியிலிருக்கும் பேர்கள் அவர்கள் அந்தப் பொறுப்பை மறுக்க மாட்டார்களென்றே நம்புகிறார்கள். யாராவது மறுத்தால வைஸ்ராயுடன் கலந்து மற்றவர்கள் அவருக்குப் பதில் ஒருவரை நியமித்துவிடலாம். யுத்தத்துக்குப் பின் கவனிக்க வேண்டிய பிரச்னைகளை நேசதேசங்களின் மத்தியஸ்தப்படி பிறகு திட்டம் செய்து கொள்ளலாம்.

இதில் கஷ்டமில்லை

இந்த யோசனை ஆகாதயோசனையல்ல இதை அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதிலும் கஷ்டமில்லை. இந்த யோசனையை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டால், இந்தியாவின் நிலைமாறுவதற்கான அருமையான ஒரு வழிபிறந்துவிடும். நியாயபுத்தியுள்ள ராஜதந்திரிகள் அடங்கிய ஸ்தாபனமும் வேண்டுமானல் என்னைக் கேள்விகள் கேட்கலாம, நான் தக்க பதில் சொல்லி அந்த ஸ்தாபனத்தைத் திருப்திப் படுத்தத் தயாராகவிருக்கிறேன். யோசனைகள் கூற என்னைப்போல யோக்கியதையுடைய இந்தியாவிலுள்ள மற்றவர்களும் இதற்குத் தயார்தான்.

யாழ்ப்பாணம் சுருட்டுத்தொழிலாளர் சமபளம்

உயர்த்திக் கொடுக்க வாக்குறுதி

யாழ்ப்பாணம், திங்கள்.

சென்ற சனிக்கிழமை பிற்பகல் சுருட்டுக் கைத்தொழில் முதலாளிமாரைத் தமக்குச் சம்பளத்தைக் கூட்டித்தரவேண்டுமென்று கேட்பதற்காக, சுருட்டுத் தொழிலாளருடைய கூட்டமொன்று மிஸ்டர். P. மோசஸ் தலைமையிற் கூடியது.

திரு. வை. சி. சி. குமாரசுவாமியவர்களும் வேறுசில முதலாளிமாரும் 1000 சுருட்டுக்கு ரூபா 1-80 வீதம் சம்பளத்தைக் கூட்டியிருக்கிறார்களென்றும் எல்லா முதலாளிமாரும் இவ்விகிதப்படியே தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் அங்கு பேசிய பலரால் எடுத்துக்காட்டப் பட்டது.

இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5 பேரைக் கொண்ட நிர்வாக சபையொன்று உயர்ந்த விகிதம் கொடுக்க மறுத்த முதலாளிமாரோடுபேசி, அவர்களையும் 1000க்கு ரூபா 1-80 சதவீதம் கொடுக்கச் சம்மதிக்குமாறு செய்வதிற் சித்தி படைத்தது.

---

91 வயதுள்ள மணமகன்

லண்டனில் விவாகம்

லண்டன், அக் 5

சோமசெற்றிலுள்ள பிரிஜ்வாட்டரைச் சேர்ந்த ஹென்றி அலென் என்பவர் தமது 91வது வயதில் மிக்க சுகதேகியாகவும் மகிழ்ச்சியுடையவராகவும் காணப்பட்டு இன்று பிரிட்ஜ்வாட்டரிலுள்ள ட்ரினிட்டிக் கல்லூரியில் தமது காலாவது கல்யாணத்தை முடித்துக் கொண்டார்.

இவர் மணமுடித்தமாதின் பெயர் ஸ்ரீமதி ஹரியெற் அமெலியாசவர்ஸ் ஆகும் வயசு 76.

இவர்களுக்கு மணமுடித்து வைத்தகிறிஸ்தவக்குருக்கள் "அவர்கள் மிக்க ஆனந்தகரமான மணமகன்"என்றும், "அவர்கள் ஒருவரை யொருவர் மிகவும் நேசிப்பதாகத் தெரிகிறது" என்றும் கூறினர்.

தற்கொலை

சென்ற ஞாயிற்றுக்கிழமை (4-10-42) இரவு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய T. சவுந்தரராசா அவர்கள் கோண்டாவிலுள்ள தமது வீட்டு வளவின் வெளிப்புறத்துள்ள ஒரு பூவரசமரத்தில கயிறுமாட்டி தூங்கியபடி பிரேதமாகக் காணப்பட்டார். பிரேத விசாரணையில் இவர் தற்கொலை செய்தாரென்று நிச்சயிக்கப்பட்டது. இவருக்குரிய இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை காலை சுற்றமித்திரர் ஆசிரியர், மாணாக்கர்கள், ஆகிய பலர் சமுகத்தில் முறைப்படி செய்யப்பட்டன. இவர் மரணம் பெரும் பரிதாபமானது.

விளக்கணைப்பு விதிகள் கண்டிப்பாக அநுஷ்டித்தல்

உள்வீட்டு விளக்குகள் விஷயத்திற் கவனக் குறைவு

பொலிஸ் அதிகாரியின் எச்சரிக்கை

கட்டிடங்களிலுள்ள விளக்குகள் சம்பந்தமாக விளக்கணைப்பு விதிகள் எதிர்காலத்திற் கண்டிப்பாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படவிருக்கின்றன.

கொழும்புப் பொலிஸ் சுப்பிரின்டென்டன் மிஸ்டர். ஜி. எஸ். பேக்கர் சென்ற திங்கட்கிழமை ஒரு பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கும்போது தெரிவித்ததாவது:-

"இவ்விஷயத்தில் பொதுமக்களின் கவனயீனம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. வழக்கு நடவடிக்கை யெடுத்தே இந்நிலைமையைச் சமாளிக்க வேண்டும்.

பல்கணிகளும் கதவுகளும் திறந்து வைக்கப்படுமிடங்களில் விளக்குகளின் ஒளி வெளியே வீசுவதைத் தடுக்கும் பொருட்டு அவை கறுப்புக் காகிதத்தால் அல்லது மற்றும் ஏதுவஸ்துவால் சரிவர மறைக்கப்பட வேண்டு மென்றும் ஒளி தரையை நோக்கிச் செல்ல வேண்டுமே யன்றிச் சுவர்கள்மீது செல்லக்கூடாதென்றும் நான் மீண்டும் வற்புறுத்தினேன்.

இத்தருணத்தில் மற்றொரு விஷயத்தைப் பொதுமக்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது. விமான எச்சரிக்கை ஊதுகுழல் சப்திக்கப்படும்பொழுது பூரண விளக்கணைப்பு அநுஷ்டிக்கப்பட வேண்டும். எனவே, வெளியே எவ்வித வெளிச்சமும் தெரியா வண்ணம் அதி ஜாக்கிரதையுடன் ஒழுங்குகள் செய்யப்பட்டாலன்றிக் கட்டிடங்களில் விளக்குகள் எரியவிடக் கூடாது.

வீடுகளின் பின்புறங்களிலுள்ள விளக்குகள் இப்பொழுது சரிவர மறைக்கப்படவில்லை. குறித்த கட்டுப்பாடுகள் வீட்டுப் பின்புற விளக்குகள் விஷயத்திலும் அநுஷ்டிக்கப்படவேண்டும்."

ஒரே பிரசவத்தில் 5 குழந்தைகள்

லிஸ்பன் அக் 5—

போர்த்துக்கேய மேற்காபிரிக்காவிலுள்ள மலாங் என்ற ஒரு நீக்ரோ ஸ்திரீக்கு ஒரு பிரசவத்தில் 5 பெண் குழந்தைகள் பிறந்ததாகவும் அனைத்தும் சௌக்கியமாக இருப்பதாகவும் இங்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

புதிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்

கர்னல் ஹாலண்ட் நியமனம்

இலங்கைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர். ஜி. என். பாங்ஸ் அண்மையில் ஓய்வுபெற விருப்பதால், இவருடைய ஸ்தானத்துக்கு கர்னல் ஜி. எச். ஆர். ஹாலண்ட் நியமிக்கப்பட்டிருக்கிறார். மிஸ்டர். பாங்ஸ் தாம் பதவியிலிருந்து விலகுவதற்கான பத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கிறார்.

இப்பொழுது பிருத்தானிய பொலிஸ் படையில் கடமையாற்றி வரும் கர்னல் ஹாலண்டின் சேவையை இலங்கைக்குத் தருவதாக [illegible] குடியேற்றநாட்டு மந்திரி அனுப்பியுள்ள தந்திச் செய்தி யொன்று கூறுகிறது.

மார்ச் மாதத்திய நியமனம் அண்மையில் அரசாங்க சபையில் அங்கீகரிக்கப்பட்ட பொழுது கர்னல் ஹாலண்டை [illegible] வேண்டுமென்று விதிக்கப்பட்டது.

கர்னல் ஹாலண்டின் வரலாறு

கர்னல் ஹாலண்ட் 1935-ம் ஆண்டு இங்கிலாந்தில் [illegible] இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டார். 1931-1934-ம் ஆண்டுகளில் லங்காஷயர் பிரதம கொன்ஸ்டபிளாக இவர் கடமை பார்த்தார். 1934-ம் ஆண்டில் இருந்து 4 வருடகாலம் [illegible] பொலிஸ் கமிஷனராக உதவிக்கொமிஷனராகக் கடமையாற்றினார்.

இவர் இந்தியாவிலும் பல முறைகளிலும் பல [illegible] உயரிய பதவிகளை வகித்தவர்.

பெண்கள் கடமை

1-ம் பக்கத் தொடர்ச்சி

அருமையான வளர்ப்பாகுமன்றி இவ்வாறு வளர்ப்பது மேன்மையாகமாட்டாது.

இக்காலம் பலவிதமான பிறநாட்டு நாகரீகங்கள் வந்து நமது நாட்டில் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன. அலை கடும் பெருக்கெடுத்தோடும் ஆறானது மரங்கள் முதலான பொருட்களையும் வாரிச் சென்று கடலிற் சேர்ப்பதுபோல், நம்நாட்டுச் செல்வத்தையும் வாரிச் சென்று பிறநாடுகளிற் சேர்க்கின்றன. அத்தோடு நம் உடல்வலத்தையும் கெடுத்துவிடுகின்றன. இவற்றைக்கண்டு பெண்கள் மயங்கலாகாது. எதிர்த்து நிற்றல் வேண்டும். எதிர்த்து நிற்பாராயின் அவை தம் தாண்டவம் சிறுத்துத் தாம் வந்த வழியே திரும்பிச் சென்றுவிடும். நமது பண்டை நாகரீகம் பொலிந்து விளங்கும்.

அருமைச் சகோதரிகளே! நீங்கள் கடனாற்றுவதிலிருந்து தான் பெருமையடைய முடியும். பெண் குழந்தையென்று கேட்டவுடன் இடிகேட்ட நாகம்போய் நடுநடுங்கும் காலம்போய் முகிற்குழாம் கண்ட மயிற்குழாம் போல மகிழும் காலம் வரும். இந்தியநாடும் நம இலங்கையும் பண்டைய நிலை பெய்தும். இக்காலம் நீங்கள் ஆற்றவேண்டிய கடமைகள் பல இருக்கின்றன. அவற்றை அமைதியுடன் ஆற்றுங்கள். தன்னலங்கருதாது செய்யும் கடமையே தலை சிறந்தது. மாடமாளிகைகளில் இருந்து பலவேலையாட்களை வைத்து வேலை வாங்குவோர்களிலும் அன்புநிலை நின்று தன்னலங்கருதாது தொண்டு செய்வோரே தலைசிறந்த இன்பத்துடன் வாழ்வர். அந்த இன்பத்தின் அருமை அவ்வாறு ஆற்றுவோர்க்கே இனிது புலனாகும். அவர்களே எவ்வாராலும் போற்றப்படுவர்; புகழப்படுவர்; இன்பத்துடன் வாழ்வர் கடவுள்நிலை பெய்துவர். பெண்களுக்கு வீட்டிலுள்ள கடமைகள் போல வெளியே செய்ய வேண்டிய கடமைகளும் உண்டு. வீட்டிலுள்ள கடமைகளின் பொருட்டு வெளியே செய்யவேண்டிய கடமைகளின் பொருட்டு வீட்டிலுள்ள கடமைகளையும் மறத்தலாகாது. இரண்டையும ஒருங்கு செய்வதே பெண்கள் கடமைகளையும் மறத்தலாகாது. இரண்டையும் ஒருங்கு செய்வதே பெண்கள் கடமையாம்.

பெண்கள் கடமை யென்னும் பொருள்பற்றி யெழுதப்புகின் மிக விரியும், ஆயினும் இன்றியமையாத சிலவற்றைப்பற்றி மேலே கூறியிருக்கிறேன். இன்னும் ஆற்றவேண்டிய கடமைகளை நன்கு ஆராய்ந்து ஆற்றுங்கள். வீண் எண்ணங்களுக்கும் வீண் பேச்சுக்களுக்கும் இடங்கொடாது உயர்ந்த எண்ணத்துடன் நன்று ஆற்றுங்கள். அடக்கம், பொறுமை, அன்பு, தொண்டு, பரநலம், வீரம் முதலான பெண்மைக் குணங்களுடன் நின்று ஆற்றுங்கள். எதையும் வாய்மைக்குறைவிடமாய் தூய்மைக் கிருப்பிடமாயிருந்து ஆற்றுங்கள். சிறுசிறுவேற்றுமைகளைப் பாராட்டாது சகோதர உணர்வுடனும் சமரச நோக்குடனும் ஆற்றுங்கள். நம்நாடு நன்னிலை அடையத்தக்க வழிகளிலெல்லாம் பாடுபடுங்கள். உமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவிராயின் நமது நாடும் நன்னிலையடையும். இன்பமணங் கமழும் தன்னலங் கருதாது பெண்ணுலகு தன் கடனாற்ற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

"அன்பர் பணிசெய்ய என்னையாளாக்கி
விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும்
பராபரமே"

—தாயுமானசுவாமிகள்

ஸேர். பரனின் இந்தியத் தூது?

இலங்கை உள்நாட்டு மந்திரி ஸேர். பாரன் ஜயத்திலகா அக்டோபர் மாதம் 10-ந் திகதி கொழும்புக்கு வந்து சேருவாரெனத் தெரிகிறது.

அவர் இங்கே வந்ததும் தமது விசேஷ இந்திய உணவுத்தூதின் முடிவுகள் பற்றி விவரமான அறிக்கை யொன்றை மந்திரி சபையில் சமர்ப்பிப்பார்.

மந்திரியின் தூது காரணமாகத் திருப்திகரமான பலன் ஏற்பட்டிருப்பதாக இதுவரை அவரிடமிருந்து கிடைத்த அறிக்கைகளில் இருந்து தெரிய வருவதாக அறியப்படுகிறது.

ஸேர். பாரன் ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி இந்தியாவுக்குப் பிரயாணமானார். அவருடன் விளம்பர அதிகாரி திரு. கே. வைத்தியநாதனும் மற்றும் சிப்பந்திகளும் சென்றனர். இத்தூது சம்பந்தமாக ஸேர். பாரன் குறைந்த பட்சம் நான்கு மாதக் காலம் வரையிலாவது இந்தியாவில் தங்க நேரிடக்கூடு மென்று மந்திரி இலங்கையை விட்டுப் புறப்பட்ட போழுது கருதப்பட்டது.

சைவ சமயிகளுக்கு எச்சரிப்பு

1ம் பக்கத் தொடர்ச்சி

முதலியவற்றை வேதாகம விதிப்படிச் செய்யச் சக்தியற்றவரிருக்கின்றார்கள். இவர்கள் பூசை செய்யும் கோயில்கள் பலவித அக்கிரமங்களுக்கு வாசஸ்தானமாய் மூர்த்திகரமில்லாதழிகின்றன.

இவ்வாறாக நமது சமயத்தின்கதி எங்குபார்த்தாலும் அதோகதியாகவிருக்கிறது. இதைக் கண்ணுற்ற மிக மேதாவிகளாகிய ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் இத்தேசத்தைக் கிறிஸ்தவதேசமாக்கிவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு சாடுநகரம் மூலைமுடுக்கு காடுமேடு எங்கும் பாடசாலைகள் வைத்து அதில் நம்முடைய சிறுவர்களுக்குத் தங்கள் சமய நூல்களையும் ஒழுக்கங்களையும் கற்பித்தும் இன்னும் பற்பல முயற்சிகளையும் செய்தும் நம்மவர்களைக் கூட்டங் கூட்டங்களாகவும் கிராமம் கிராமங்களாகவும் கிறிஸ்தவர்களாக்கி இதுவரையில் கோடிக்கணக்கான நம்மவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி விட்டார்கள். இன்னும் வருடமொன்றுக்கு [illegible] ஜனங்கள் வீதமாக நம்மவர்களைக் கிறிஸ்தவர்களாக்கி வருகிறார்கள். இவர்களால் முற்றிலும் கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் போக எஞ்சினவர்களையும் கடைபுடை பாவனைகளில் கிறிஸ்தவர்களாக்கிப் பதப்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதனால் நாளுக்குநாள் நம்மவர்களின் தொகை குறைந்து வருகின்றது. இவ்வாறு குறைந்து கொண்டே வருமானால் கடைசியிற் சைவசமயம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடக்கூடிய காலமும் வரக்கூடும். சைவசமயிகளே! இதை நீங்கள் எப்படிச் சகித்திருக்கிறீர்கள்? உங்களுக்குச் சமயாபிமானம் இல்லையா? இதைப் பார்க்க உங்கள் கண் கூசவில்லையா? மனம் பதைக்கவில்லையா? இதைத் தடுக்க உங்களாலாகாதா? கிறிஸ்தவர்கள் உங்கள் சிறுவர்களுக்குப் பாடசாலைகள் வைத்து அவைமூலமாகத் தங்கள் சமய நூல்களையும் ஒழுக்கங்களையும் உங்கள் சிறுவர்களுக்குப் போதித்து வருவதற்கு நீங்களுமுடன்பட்டிருந்தால் எவ்வளவு அக்கிரமம்! உங்களுக்கென்று பாடசாலைகளில்லையா? உங்கள் பிள்ளைகள் உங்கள் பாடசாலைக்குப் போனால் உங்கள் சமயவுண்மையை யறிந்து விடுவாரல்லவா? இதற்கு வேறாக இக் காலத்தில் மேனாட்டு நாகரீகம் என்று ஒரு வியாதி எம்மவரை வருத்துகிறது.

இது விஷபேதி முதலிய வியாதிகளைக் காட்டிலும் கொடிய வியாதி. மற்றை வியாதிகள் வந்தால் சிவநாமஸ்மரணை செய்யலாம். இந்த வியாதி கண்டவர்களுக்குச் சிவநாமஸ்மரணை என்று சொன்னால் வாய் குழறும். அவற்றால் கடையும் உடையும் உணவும் மாறுவதல்ல. இவற்றால் இவையெல்லாம் மாறிவிடும். அவைகளுக்குத் தலைமயிர் எப்படியிருந்தாலுமிருக்கலாம்; இதற்கு உடனே தலைமயிரைக் கத்தரித்து அடிக்கடி சீப்பினால் வாரிக்கொண்டேயிருக்கவேண்டும். அவைகளுக்கு ஆறுமுழ வஸ்திரம் போதும், இதற்கு உயர்ந்த உடுப்புகள் வேண்டும். அவைகளுக்குச் சுத்தநீரும் அற்ப ஆகாரமும் போதும். இதற்கு உயர்ந்த சாராயங்களும் இறைச்சி முதலிய ஆகாரமும் வேண்டும். அவைகளுக்கு வாழையிலை ஆகும் இதற்கு வாழையிலை ஆகாது. எதையும் பிங்கானை, கண்ணாடிகள் கரண்டிகள் கொண்டே சாப்பிடவேண்டும். அவைகளுக்குச் சரீரம் எங்கும் சாற்றுப்பட்டாலும் படலாம், இதற்குப் பாதங்களில் கூடப் பாதரட்சையும், மேற்சோடும் போட்டு மூடிவைத்தல் வேண்டும். அவை சிகிச்சையால் நீங்கிவிடும். இதற்குச் சிகிச்சையேயில்லை. அவர்களால் கண்பார்வை கெடாது. இதனால் இளமையிலேயே பார்வை கெட்டு எந்நேரமும் மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டு இருத்தல் வேண்டும். அந்நோயாளிகள் தரையிலுமிருப்பார்கள். இந்த நோயாளர்கள் பெரியார் சிறியார் என்று பாராமல உயர்ந்த ஆசனத்திலேயே இருக்க வேண்டும். இவர்களுக்கு விபூதி என்றால் வேதனை உண்டாகும். உருத்திராக்கம் என்றால் ஓங்காளமுண்டாகும். தமிழ் என்றால் தலைநோய் உண்டாகும். இந்த நோய் நம்மிடத்துப் பிரவேசித்து விடுமானால் அதைவிட்டு ஒருபோதும் நீங்காமல் அதி தீவிரமாகப் பரவும். சைவப்பாடசாலைகள் இப்பொழுது எங்கள் கலை காலத்தினால் ஆங்காங்கு நடைபெறுகின்றன. ஆயினும் அப்பாடசாலைகளிற் படிக்கும் பிள்ளைகளுக்கும் சிறுவர்களுக்கும் வாலிபர்களுக்கும் சமய உணர்ச்சி தலைகாட்டவேண்டும். எங்கள் கிராமத்திலே நாங்கள் ஒருபாடசாலை நடாத்துகிறோம். ஒருநாள் அவ்விடத்திற்கு வந்த ஒருவர் ஒரு தேளிருக்கக் கண்டு அதனை அடிக்கச் சென்றார். அதைப்பார்த்த எங்கள் சிறுவர் அவரை நோக்கி, "ஐயா, பாவம், பாவம் அடிக்கவேண்டாம்" என்று கூவினார்கள். அவர் அதைக்கேட்டு அத்தேளை அடிக்கமனம் வராமல் தூரத்தே கொண்டுபோய் எறிந்துவிட்டார். சிறு ஜெந்துக்களை வருத்துவதை விளையாட்டாகவுடைய சிறுபிள்ளைகளுக்கு விஷஜெந்துவாகிய தேளிடத்திலும் கருணையுண்டானமைக்கும், இவர்களைப் பார்த்த அம்முதியவருக்கு இரக்கம் வந்தமைக்கும் காரணமாயிருந்தது எங்கள் பாடசாலையல்லவா? மற்றொருதினத்தில் இம்பாடசாலையில் வாசிக்கும் சுமார் ஏழுவயதான சிறுவனொருவன், தன அண்ணன், தாய், தந்தையோடு ஓர் சிவாலயத்திற்குப் போய் ஆலயத்தைப் பிரதட்சணம் செய்யும்போது சண்டேஸ்வரரண்டை வந்ததும், அவன் அண்ணன் சண்டேஸ்வரரைச் சுட்டிக்காட்டி "இதோ செவிட்டுப் பிள்ளையார்" என்று சொல்லிப் பலமுறை தன் கைகளை உதைத்துத் தட்டினான். அவனோடு அவன் தாய் தந்தையரும் கைகொட்டி நகைத்தார்கள். அப்போது அச்சிறுவன் அவர்களைப் பார்த்து நகைத்து, அவர் சண்டேஸ்வர [illegible], அவர் சரித்திரத்தையும், அவரிடம் கைதட்டுவதின் கருத்தையும் மழலைச்சொற்களால் விளக்கினான். அதைக்கேட்டு அவன் அண்ணன் வெட்கமடைந்தான். அவன் தாய் தந்தையர் நாணமும் மகிழ்ச்சியும் அடைந்தனர். அவர் அதிசயமடைந்து எங்கள் பாடசாலையைப் புகழ்ந்தனர்.

பெரியோர்களே! சைவக்கல்லூரிகள் சைவப்பாடசாலைகள் என்னும் சைவ உணர்ச்சி ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் மிக விளங்குதல் வேண்டும். அப்படி விளங்குமானால் எங்கள் பாடசாலைகளென்று ஒரு சைவத்தன்மை விளங்கும். கிறிஸ்தவபாடசாலைகளில்லாத சைவத்தனி ஒழுக்கம் நிலைபெற்றுப் பிரகாசிக்கும். சைவப்பெற்றோர் எங்கள் பாடசாலைகளின் மேல் விழுந்து தம் பிள்ளைகளை அனுப்புவார்கள். இவ்வாறு நிகழுமாயின் சைவ உலகெலாம் தழைத்தோங்கும்.

பாரதி

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சின்னக் குமிழிகளில் சின்முகம்
கண்டேன்

கேட்கும் ஒலியில் எல்லாம் இறைவனுடைய கீதம் இசைக்கிறது. காதை எதற்காகப் பொத்திக்கொள்வது? தீண்டு பொருளில் எல்லாம் இறைவனைத் தீண்டும் இன்பம் கிட்டுகிறது. உடலை உணர்ச்சியற்றதாக்குவானேன்? அண்ட சராசரங்கள் அனைத்தும் அவற்றின் செய்கைகள் யாவும்

காலப்பெருங்களத் தின்மீது, எங்கள் காளி நடம்........

ஆகவே, பயமென்னும் பேய்தன்னை அடித்து விரட்டிவிட்டு, மனிதப் பண்பின் பலவேறு சக்திகளையும் வளர்க்கவேண்டும், என்றார் பாரதி. வியனுலகனைத்தும் அமுதெனப்பருகும் வேதவாழ்வினைக் கைப்பிடித்தார். அனைத்து மாக் தொழில் செய்தால் அமரனுவாய், என்றார். புல்லாகவோ பூண்டாகவோ பிறவாமல் மனிதனாய்ப் பிறந்தேனே என்று மனம் நோகவில்லை. புல்லும் பூண்டும் காக்கையும் குருவியும் மனிதனும் ஒரே ஜாதிதானே. நோக்கு திசையெல்லாம் நாமன்றி
வேறில்லை

நோக்க நோக்கக் களியாட்டம்
என்று கூறி
நீதான் யான் சிவகுமாரன் யானன்றோ?...
நான் புதியன், நான் கடவுள், நலிவிலாதன...

என்று எக்களித்தார்.

இதனால் தான் பாரதி கவிஞனாக முடிந்தது. கவிதை என்பது மனிதப் பண்பின் பல்வேறு அம்சங்களை, வண்ணங்களை வார்த்தை வடிவிலே தேக்குவதுதானே. மனிதனுக்கு மனிதன் உள்ள உறவையும், மனிதனுக்கும் மனிதவாழ்க்கையின் அரங்கான இப்பிரபஞ்சத்திற்கும் உள்ள உறவையும், பொய் என்று அகற்றிவிட்டால் கவிதையேது? இந்த உறவுகளை உண்மையென்றும், உண்மைக்கு உண்மையான மெய்ப்பொருளை அடைய உதவும் சாதனங்கள் என்றும் பாரதி கருதியதால்தான் அவருடைய கவிதையில் மெய்ப்பொருள் அறிவு நிலையைக் காண்கிறோம். இந்த நிலையை அடைவதற்கு உலகத்தில் உள்ள சகல ஜீவராசிகளையும் தானாகவே கருதவேண்டும். அதாவது, கடவுள் நிலையிலே நின்று அவைகளைக் காணமுயல வேண்டும். இதைத்தான் பாரதி வேண்டுகிறார்.

என் கண்ணை மறந்து விரு கண்களையே
என்னகத்தில் இசைத்துக் கொண்டு
நின் கண்ணால் புவியெல்லாம் நீயென
நான் கண்டே நிறைவு [வே

கொள்ளவேண்டும் என்று இறைவனை வணங்குகின்றார். இதைச் சாதிக்கும் வழி அன்பை வளர்ப்பதுதான் என்று பாரதியின் முரசு பேசுகிறது.

ஒன்றென்று கொட்டுமுரசே-அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே.
அன்பென்று கொட்டுமுரசே-அதில்
யார்க்கும் விடுதலை உண்டு.

உண்மைதான். அன்பின் தத்துவம் பிறர்க்காக நம்மை மறப்பதே. நாம் பிறர் என்ற பேதமில்லாமல், பிறர்க்காக வாழ்கிறோம் என்ற நினைவுகூட இல்லாமல் நம்மை இழந்து விடுவதே. நம்முடைய அன்பு ஓங்கி வளரும்போது, எல்லா ஜீவன்களிடமும் அது வெள்ளமாகப் பாயும்போது, நாம் அவற்றோடு கலந்து, அவற்றின் உறையும் மெய்ப்பொருளை உணர்ந்து விடுகிறோம், அன்பை வளர்ப்பது முக்கியம். அதற்கு நம்முடைய வாழ்க்கையே பயிற்சிக்கூடம். தந்தை, தாய், உடன்பிறந்தார், சுற்றம், மனைவி, மக்கள — இவர்களிடத்திலே இயல்பாகவே நமக்கு ஊறும் அன்பைப் பெருக்கவேண்டும். பலவிதமான மனித உறவுகளில ஜனிக்கும் அன்பின் பலவேறு வகைகளில், ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே பிறக்கும் காதல்தான் ஆழத்திலும் வேகத்திலும் சிறந்தது. ஆகவே அதைக் கொண்டுதான் அன்பின் அகண்ட பரிமாணத்தை எளிதில் பெறமுடியும் என்பது பாரதியின் நம்பிக்கை. மனிதனுடைய பெருமையெல்லாம் காதலிலிருந்து வந்துள்ளது!

காதலினால் மானுடர்க்குக் கவிதை
யுண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற் கலைக
ளுண்டாம்
காதலினாற் சாகாமலிருத்தல் கூடும்
கவலைபோம், அதனாலே மரணம்
பொய்யாம்.

என்று சொல்கிறார். ஆகவேதான் மெய்ப்பொருள் நாட்டம் என்ற கடவுட்காதலை அவர் வெளியிடும்போது அவர் சொற்களின் வேகமும், துடிதுடிப்பும் நமது நெஞ்சில் பாய்கின்றன.

வார்த்தை தவறிவிட்டாய்— டி
கண்ணம்மா
மார்பு துடிக்குதடீ
பார்த்த இடத்திலெல்லாம்—உனைப் போலவே
பாவை தெரியுதடீ
மேனி கொதிக்குதடீ-தலை சுற்றியே
வேதனை செய்குதடீ
வானிலிடத்தை யெல்லாம்—இந்த
வெண்ணிலா
வந்து தழுவுது பார்.
மோனத்திருக்குதடீ இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும்—பிரிவென்
பதோர்
நரகத் துழலுவதோ?

இதைப் போலவே கடவுளோடு கலந்த மெய்ப்பொருள் அறிவு நிலையை, காதலின் அலைந்த ஒருத்தி பேசுவதுபோல் பாரதி வெளியிடும்போது, அந்த நிலையின் சொல்லுக்கு அடங்காத அரியானந்தம் அவர் சொற்களில் ததும்புகிறது.

உச்சி குளிர்ந்ததடீ—ஸகியே
உடம்பு நேராச்சு.
மச்சிலும் வீடுமெல்லாம்—முன்னைப்
போல
மனதுக் கொத்ததடீ
இச்சை பிறந்ததடீ—எதிலும்
இன்பம் விளைந்ததடீ
அச்சமொழிந்ததடீ—ஸகியே
அழகு வந்ததடீ.
எண்ணும் பொழுதிலெல்லாம்—
அவன்கை
இட்ட விடத்தினிலே
தண்ணென் றிருந்ததடீ—புதிதோர்
சாந்தி பிறந்ததடீ

மெய்ப்பொருள் அனுபவம் இங்கே காதலாக வர்ணிக்கப்படுகிறது. வேறு எத்தனையோ விதங்களில் அதை வெளியிடலாம். பாரதியும் அதைச் செய்திருக்கிறார். கடவுளைத் தோழனாகவும் குருவாகவும், சேவகனாகவும், தாயாகவும், தந்தையாகவும், குழந்தையாகவும், வேலைக்காரனாகவும், ஆண்டானாகவும் நமக்குக் காட்டியிருக்கிறார். இந்த மாதிரியான கற்பனைகள் மூலமாகத்தான் அவருடைய நேசமான அகண்டசைதன்ய அனுபவத்தைப் பற்றிப் பேசமுடியும். துண்டிற்புழு, சுடர்விளக்கு, கண்ணிக்கிளி, குழந்தையின் விளையாட்டுப் பொம்மை, பெண்மைக்குணம், தழல், எத்தனை எத்தனையோ பொருள்கள், மனித அனுபவங்கள், எல்லையில்லாத பேரின்பத்தைச் சுட்டிக்காட்டும் ஸங்கேதங்களாகப் பாரதிக்கு அமைகின்றன. மெய்ப்பொருளறிவு நிலை நூலக்ஷியத்தின் தவிர்க்க முடியாத இலக்கணம் இது. ஆனால் ஸங்கேதங்களாக பாரதி உபயோகிக்கும் பிரபஞ்சப் பொருள்களும், சாதாரண மனிதவாழ்க்கைச் செயல்களும், அனுபவங்களும் அவருக்குக் கேவலம் ஸங்கேதங்கள் அல்ல. ஏனென்றால், அவைகளிலே மெய்ப்பொருள் தங்கியுள்ளது என்பது அவர் சித்தாந்தம். கயிற்றைக் காட்டிப் பாம்பை அவர் உணர்த்தவில்லை. அணுவைக்காட்டி அகண்டத்தை தெளிவாக்கவில்லை. அணுவைக்கொண்டு அதனுள்ளேயே கிடக்கும் அகண்டத்தை நமக்குத் தருகின்றார்.

பொய்கை ஆழ்வாரும், பூதத்தாழ்வாரும் கடவுளைக்கண்டார்கள். இந்த வையகத்தைத் தகளியாகவும், கடலை நெய்யாகவும், கதிரவனைச் சுடராகவும் அமைத்து, அதன் ஒளியில் பரம்பொருளைக் கண்டதாகப் பொய்கை ஆழ்வார் சொல்லுகிறார். பூதத்தாழ்வாரோ அன்பே தகளியாகவும், ஆர்வமே நெய்யாகவும், இன்புருகு சிந்தை இடுதிரியாகவும் ஞானச்சுடர்விளக்கேற்றி, இறைவனை அறிந்தார். பாரதியாரைப்பற்றி நினைக்கும்போது இவ்விரண்டு ஆழ்வார்களின் ஞாபகமும் வருகிறது. பிரபஞ்சத்தின் சௌந்தர்ய விசாலமே பாரதியின் விளக்கு. மனிதப்பண்பின் மலர்ச்சான அன்பே சுடர். இந்த ஒளியிலே அவர் கண்டது என்ன? எல்லாப் பொருளையும் ஊடுருவி நிற்கும் ஒருமை, மனித வாழ்க்கையின் குறைகளை நிறைவாக்க எப்போதும் இயங்கிவரும் பெரும் கருணை, அண்டகோளச் சுழல் நடுவிலே, அசையாநெஞ்சுடன் வாழ்தற்காகப் பரம்பொருளைத் தொடக் கை நீட்டும் மனிதனுடைய பெருமை இவைகளே, முன்னிக் கவிதை வெள்ளமுண்டனவழிய, பாரதி என்ற கவிஞருக்குத் தோன்றிய கெட்டைக் கனவு.

திருச்சி, 11-9-42.

திருச்சி றேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

3-ம் பக்கத் தொடர்ச்சி

கானங்கள் ஒலிப்பதிப்பு 10 இசைக் கதம்பம் † 10-30 ஒலிபரப்பு முடிவு

சனி அக் 10

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8-00 சுசதா ஓதுவா மூர்த்திகள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 கே ஸி தியாகராஜன் வயலின் எஸ் பாலகிருஷ்ணன் வியோலா 9-00 ஒலிபரப்பு முடிவு.

1 டி எல் வாசுதேவன் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பிய சங்கீதம் † 2 தமிழில் செய்திகள் 2-05 கே ஸி தியாகராஜன் எஸ் பாலகிருஷ்ணன் வியோலா 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 டி எல் வாசுதேவன் பாட்டு 5-40 நால்வர் நான்மணிமாலை விளக்கம் 6 திரைகானம் † 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ததிரியின் கையாட்கள் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸிலுள்ளபடி கே பி சுந்தராம்பாள் பாட்டு 9 'ஓய்வற்ற தினைதனில் உழைத்திடுவோம் இசைச் சித்திரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 9-45 கோட்டு வாத்தியம் 10 நால்வகை † 10-30 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு அக் 11

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 மாதாகோவில் கோஷ்டி ஒலிபதிப்பு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஸி பி லக்ஷ்மி நாராயணமேனன் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

12 சினிமா கீதம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-4. ஸி பி லக்ஷ்மிநாராயண மேனன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 நாகமாலை † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 எம் ஏ கலியாண கிருஷ்ண பாகவதர் பாட்டு 5-40 தேவாராதனை றோமன் கத்தோலிக்க 6 எம் ஏ கலியாண கிருஷ்ண பாகவதர் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 எங்கள் தபால்பெட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 நவக்ரஹ சந்தி 8 எம் கே கனகாம்புஜம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வயலின் 10 சித்தூர் சுப்ரமண்ய பிள்ளை † 10-15 புல்லாங்குழல் † 10-30 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் அக் 12

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 படப்பாட்டுகள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 சமயபுரம் சுந்தரேச பிள்ளை நாகஸ்வரம் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1 சித்திர கீதம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐ எம் அப்துல் ரஹ்மான் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 சமயபுரம் சுந்தரேசபிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப் பயிற்சி 6 ஐ எம் அப்துல் ரஹ்மான் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-10 இத் உல்பிதா 7-30 அறிவிப்புகள் 7 35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி நாலிசையுடன் 8 எம் கே தியாகராஜ பாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இருவாத்ய இசை 10 சினிமா பாட்டுகள் † 10-30 ஒலிபரப்பு முடிவு.

பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதந் தொடக்கமாக
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்

நாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்

சமயோசிதமாகப் பின் வருமாறு பத்திரக்கிரயத்தைச்
சிறிது உயர்த்தியுள்ளார்:-

இந்துசாதனம் தமிழ்ப்பிரதி,	வருடமொன்றிற்கு	பட்டின எல்லையுள்	6.50
ஆங்கிலப்பிரதி	,,	,,	6.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	10.50
தமிழ்ப்பிரதி	,,	பிறவூர்கட்கு	9.50
ஆங்கிலப்பிரதி	,,	,,	9.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	13.50

தனிப்பிரதி 7 சதம்

விளம்பர விகிதம்

முதல் முறைக்கு

ஒரு கலம் ரூபா 10-00	அரைக்கலம் ரூபா 5-50
கால் கலம் ரூபா 4-00	ஒரு அங்குலம் ரூ. 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரேப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4-3-42—3-3-43

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரைவுளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா
25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
சேமமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(வி) (Y. 164. 1-11-41 to 31-10-42)

வெளிவந்துவிட்டது!
சைவ சித்தாந்த உண்மை
சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பயிலவிரும்பும் ஆங்கில மாணவருக்கு இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியமுறையில், "விஞ்ஞான சாத்திர அறிஞர்" ஒருவரால் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்திற் காலத்தோறும் எழுதி வெளியிடப்பெற்று வந்தது; இதனை இப்பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் தொகுத்துப் புத்தகவடிவிற் பலர்க்கும்பயன்படும் வண்ணம் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இது பதினைந்து அதிகாரங்களைக் கொண்டது; திருவாளர் சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிய முன்முகத்தோடு கூடியது. 100 பக்கங்கள் வரையிற் கொண்டது. சைவமக்களெல்லாரும் இலகுவில் வாங்கிப் படிக்கவேண்டுமென்ற நோக்கம்பற்றிப் பிரதியொன்று விலைகுறைந்து 50 சதமென விதிக்கப்பட்டுள்ளது. பெறவிரும்புவோர், மனேஜர், யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திரசாலை, வண்ணார்பண்ணை என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதானமான அறிவித்தல்
லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்றர். S. சாஸ் பத்திரண
இப்போது கிறைஸ்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறார்.
இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரை அங்கு இருப்பார்.
ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக
தம்பராவாத் தோட்டம், வரிப்பபோலா, வடமேல்மாகாணம்.
Y115 18-8-42—17-11-42

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday 8th October, 1924